# பாட்டாளி சிந்தனை

Volume 24 No. 4

December 2013

சோசலிஸ்ட் யூனிட்டி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3


### டிசம்பர் 6: பாபர் மசூதி இடிப்பு விவகாரம்

## வகுப்புவாதத்தை முறியடிக்க காங்கிரஸ், பாஜக கட்சிகளை மட்டுமல்ல முதலாளித்துவத்தையும் எதிர்த்துப் போராடவேண்டும்

டிசம்பர் 6 – இந்திய வரலாற்றில் கரைபடிந்த தினம். **1992**ம் ஆண்டு பாஜவும் சங்பரிவாரும் கற்கால காட்டுமிராண்டித்தனத்தோடு பாபர் மசூதியை இடித்த தினம். பாபர்மசூதி என்பது முஸ்லீம்களின் மத வழிபாட்டுத் தலம் மட்டுமல்ல, அது ஒரு மதிப்புமிக்க வரலாற்றுச் சின்னமும் ஆகும். ஆஃப்கானிஸ்தானில் உள்ள பாமியானில் **5**ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்ட மிகப்பெரிய புத்தர் சிலையை தலிபான்கள் உடைத்தனர். ஆனால் இத்தகையதொரு கொடுஞ்செயலை தாலிபான்கள் செய்வதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே பா.ஜ.க.வும் ஆர்.எஸ்.எஸ்.ம் இந்த வரலாற்றுச் சின்னத்தைத் தரைமட்டமாக்கியதன் மூலம் செய்துவிட்டனர். இத்தகைய திட்டமிட்ட கொடுஞ்செயலுக்கு முஸ்லீம்கள் மட்டுமல்லாது, நாட்டில் உள்ள நல்லெண்ணமும் பகுத்தறிவுச் சிந்தனையும் கொண்ட மக்கள் யாவரும் கடுமையான கண்டனம் தெரிவித்தனர்.

இத்தகைய காட்டுமிராண்டித்தன தாக்குதலில் பா.ஜ.க. – சங்பரிவார் ஈடுபட்டது இந்து மதத்தின் மீதுள்ள பற்றாலோ அல்லது பக்தியாலோ அல்ல. மாறாக அரசியல் லாபமடைவதற்கான மோசமான நோக்கமே அதற்குக் காரணம். இந்து மதத்தைப் போதிக்கும் மதிப்புமிக்க மகான்கள் என்று கருதப் படக்கூடிய சைத்தன்யா, ராமகிருஷ்ணா மற்றும் விவேகானந்தர் போன்றவர்கள் இஸ்லாம் உள்ளிட்ட அனைத்து மதங்களின் மீதும் ஆழமான மரியாதையும் சகிப்புத்தன்மையும் கொண்டிருந்தனர். இவர்களில் யாருமே, ரவீந்திரநாத் தாகூரின் கவிதை வரிகளில் வருவதைப் போல் 'கவிஞனின் சிந்தனையில் இருக்கும் ராமர் பிறந்த இடத்தை' எது என்று தேடவுமில்லை' பாபர் மசூதியை இடிக்க வேண்டும் என்று நினைக்கவுமில்லை.

எப்படியாவது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிவிடவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்து வாக்கு வங்கியை உருவாக்குவதற்காக 'ராமர் கோவில் கட்டுவோம்' என்ற பிரச்சனையைக் கையிலெடுத்து, நாடு முழுவதும் ரத யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. மதக்கலவரங்களும் அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்டது. பல்வேறு மாநிலங்களில் இந்த யாத்திரை சென்ற பாதைகளில் சிறுபான்மையினருக்கு எதிராக மோசமான கொலைவெறித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. லட்சக்கணக்கான குழந்தைகள் அநாதைகளாக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கான பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர். கொள்ளைகளும் சூறையாடுதல்களும் பெருமளவு நடத்தப்பட்டன. தேர்தல் ஆதாயம் பெறும் அதே நோக்கத்தோடு சில ஆண்டுகளுக்கு முன்பு குஜராத்தில் நடைபெற்ற மிகமோசமான சிறுபான்மை இன– எதிர்ப்புக் கலவரம், மொத்தமொத்தமாகக் கற்பழித்தல், சொத்துக்களை அழித்தல் சூறையாடுதல் போன்றவை எந்தவொரு நாகரீக நாட்டிலும் கற்பனை செய்து பார்க்க முடியாது. இந்து மதத்தின் பாதுகாவலர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் ஏற்பாடு செய்து நடத்திய காட்டுமிராண்டித்தனமான செய்கைகள் பட்டியலில் கிறிஸ்துவ பாதிரியார்கள் எரிப்பு, கன்னியாஸ்த்ரீகள் கற்பழிப்பு போன்றவைகளும் அடங்கும். இந்த இந்து மத வெறியர்களின் தாக்குதல், குரூரம் மற்றும் மிருகத்தனமான பைத்தியகாரச் செயல்களை ஹிட்லர் தலைமையிலான பாசிச ஜெர்மனியின் செயல்களோடு மட்டுமே ஒப்பிட முடியும். ஆனால் இத்தகைய மன்னிக்கமுடியாத குற்றங்களைச் செய்தமைக்காக அவர்கள் எந்த நீதிமன்றத்திலும் எத்தகைய விசாரணையையும் சந்திக்கவுமில்லை, இனி சந்திக்கப்போவதுமில்லை. ஜனநாயகம் மற்றும் நாகரீகத்திற்கு மிக மோசமான எதிரிகள் இவர்கள்தான். ஆனால், இவர்கள்தான் இன்று நாட்டையும் ஆண்டு வருகின்றார்கள்.

மற்றொருபுறம், சி.பி.ஐ. (எம்) ஆல் மதச்சார்பற்ற சக்தி என்று சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள காங்கிரசும் குற்றச்செயலில் ஈடுபடுவதில் சற்றும் சளைத்ததல்ல. காங்கிரசும் கூட நீண்ட காலமாகவே பல்வேறு மாநிலங்களில் மதக்கலவரங்களை நடத்தியுள்ளது. அதற்குப்பின்பும் பாதிக்கப்பட்டுள்ள முஸ்லீம்களின் பாதுகாவலன் என்று பாசாங்கு செய்துகொள்கிறது, அதோடு அவர்களை வாக்கு வங்கியாகப் பயன்படுத்திக் கொள்கிறது. பாபர் மசூதி கதவுகளை முதலில் திறந்ததும் அங்கு இந்துமத பூஜையை நடத்தியதும் மதவெறியைத் தூண்டுவதற்காக அங்கே ராமர் யாகம் வளர்த்ததும் காங்கிரஸ்தான். பின்னர் இந்த வெறியை மேலும் தூண்டுவதில் பா.ஜ.க. காங்கிரசை விஞ்சிவிட்டது. சீக்கிய எதிர்ப்புக்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## கடும் விலைவாசி உயர்வுக்கு எதிராக கொல்கத்தாவில் எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) நடத்திய பிரம்மாண்ட பேரணி




பதுக்கல்காரர்கள், கறுப்புச்சந்தைக்காரர்கள், போலீஸ் மற்றும் நிர்வாகம், அரசியல் தரகர்கள் ஆகியோரின் கூட்டணியால் உருவாக்கப்பட்ட செயற்கையான பற்றாக்குறையின் காரணமாக பன்மடங்கு விலைவாசி ஏறிவிட்டது. கடும் சித்திரவதைக்கும் பேரழிவிற்குமுள்ளான அதிகரிக்கும் வேலையின்மை, உண்மையான வருமானத்தில் கடும் வீழ்ச்சி, ஆலைமூடல், வேலையிழப்பு, எல்லையற்ற ஊழல், பெண்களின் மீதான அதிகரிக்கும் பலாத்காரம் மற்றும் பாலியல் தாக்குதல்கள், பலாத்காரத்திற்குள்ளானவர் கொலை செய்யப்படுதல், அரசியல் அதிகாரத்தை சுவைக்கும் ஆளும் வட்டாரத்தின் ஆதரவு பெற்ற கிரிமினல்கள் மற்றும் சமூகவிரோதிகளின் பெருக்கம் ஆகியவற்றைக் கண்டு வெறுப்புற்ற நாட்டின் பிற பகுதி மக்களைப் போலவே மேற்கு வங்க மக்களும் ஆளுவோரையும் ஒடுக்குவோரையும் குலை நடுங்க வைக்கும் ஒரு அணி திரட்டப்பட்ட இயக்கத்தை மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்நோக்குகின்றனர்.

இந்த ஓட்டுக்கட்சிகள் – அவை வெளிப்படையாக அறிவித்துக்கொண்ட வலதுசாரிகள், தங்களைத் தாங்களே காந்தீயவாதிகள் அல்லது மார்க்சிஸ்டுகள் என அறிவித்துக் கொண்டவர்கள் மற்றும் 'அதிகார' இடதுசாரிகள் அதிகரிக்கும் கஷ்டங்கள், அழுத்திக் கொண்டிருக்கும் வாழ்க்கை நிலைமைகள் பற்றி அக்கறை கொள்ளவில்லை என்பதை தங்கள் அனுபவத்தின் மூலம் மக்கள் உணர்ந்திருக்கின்றனர். இந்த கட்சிகளெல்லாம் வித்தைகளிலும் ஏமாற்றுகளிலும் ஈடுபட்டு துன்பப்படும் மக்களின் அதிகரித்துவரும் அதிருப்திகளைப் பயன்படுத்தியும் சுரண்டியும் அதிகாரத்தில் அமரவும் அரசியல் எதிர்காலத்தை நிலைநிறுத்திக் கொள்ளவுமே முனைகின்றன. மக்கள் பசி,

தொடர்ச்சி 2ம் பக்கம்

# டிசம்பர் 6: பாபர் மசூதி இடிப்பு விவகாரம் . . .

1ம் பக்கம் தொடர்ச்சி

கொலைக் கலவரத்தை டெல்லியில் நடத்தியது காங்கிரஸ். காங்கிரஸ் ஆட்சியிலும்கூட தலித்துகள் மற்றும் பழங்குடியினர் மீது காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்களும் மிருகத்தனமான சித்திரவதைகளும் செய்யப்பட்டன.

பா.ஜ.க.வை தேர்தலில் எதிர்த்துவிடுவதால் மட்டுமே மதச்சார்பின்மையை உயர்த்திப் பிடித்து விடுவதாக ஆகிவிடாது என்பதை நன்கு மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். மதச்சார்பின்மை என்றால் அரசியல், பொருளாதாரம், கல்வி, நீதித் துறை, நிர்வாகம் மற்றும் சமூக விவகாரங்களிலும் பழக்கவழக்கங்கள் எல்லாவும் மதத் தாக்கத்தி லிருந்து விடுபட்டு ஜனநாயகப்பூர்வ, மனிதாபி மான மதிப்புகளாலும் கண்ணோட்டத்தாலும் வழி காட்டப்பட வேண்டும். எந்தவொரு மதத்தையும் அரசு எதிர்க்கவோ ஆதரிக்கவோ செய்யாது. மதம் என்பது அதை நம்புவோரின் தனிப்பட்ட விவகார மாக விடப்படும். அரசு, அதன் அரசாங்கம், சமூக உறவுகள் போன்றவை மதத்தை சாராததாக இருக்கும். மதப் பிற்போக்குத்தனத்தின் அடிப் படையிலிருந்த காலாவதியாகிப்போன நிலப் பிரபுத்துவத்தை தூக்கியெறிந்து முதலாளித் துவமும் நவீன ஜனநாயக அமைப்பும் உருவான காலத்தில் வரலாற்றுத்தேவையாக பாராளுமன்ற ஜனநாயகம், பகுத்தறிவு சிந்தனை செயல்முறைப் போக்கு, தனிநபர் சுதந்திரமான சிந்தனை, பெண் விடுதலை போன்ற கோட்பாடுகள் தோன்றின. முதலாளித்துவம் வளர்ந்த இந்த காலகட்டத்தில் தான் ஐரோப்பாவில் மதச்சார்பின்மை கருத்தும் வளர்ந்தது. ஆனால் முதலாளித்துவம் ஏகாதிபத்திய கட்டத்தை அடைந்துவிட்டதோடு முழுக்கமுழுக்க சந்தர்ப்பவாதமாக பிற்போக்குத்தனமாக ஆகி விட்டநிலையில் ஐரோப்பிய முதலாளித்துவம் தனது முற்போக்குக் குணாம்சத்தை இன்று தாங்கிநிற்கவில்லை.

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில், காங்கிரசின் வலதுசாரி பூர்ஷ்வாத் தலைமை, முதலாளித்துவ எதிர்ப்பு புரட்சி பற்றிய பயத்தின் காரணமாக, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான சுபாஷ் சந்திரபோஸ், பகத்சிங் போன்றோரின் சமரசமற்ற, தீவிரமான, ஆயுதம்தாங்கிய போராட்டப் பாதையை எதிர்த்தது. அதோடு அரசியல் களத்தில் பூர்ஷ்வா சீர்திருத்தவாதத்தை விதைத்தது. அதேபோல், கலாச்சார மட்டத்திலும் அது நீண்டகாலமாக இருந்த காலாவதியாகிப்போன நிலப்பிரபுத்துவ கருத்துக்கள், மற்றும் மதசகிப்பின்மை மற்றும் மத மூடநம்பிக்கை போன்றவற்றோடு சமரசம் செய்து கொண்டதோடு, ராம்மோகன் மற்றும் வித்யாசாகர் ஆகியோர் உயர்த்திப்பிடித்த மறுமலர்ச்சிப் பாதையைக் கைவிட்டது. மதத்தின் தாக்கத்தி லிருந்து விடுபட்ட உண்மையான மதச்சார் பின்மையை கடைப்பிடிக்கவேண்டும் என்ற சரத்சந்திரர், சுபாஷ் சந்திரபோஸ், நஸ்ருல், பகத் சிங் போன்றோர் திரும்பத்திரும்ப விடுத்த அறை கூவலுக்கு செவிமடுக்காத காங்கிரஸ் தலைமை, அனைத்து மதங்களும் சேர்ந்து இருப்பதை ஊக்கப் படுத்துகிறோம் என்ற பெயரில் உயர்ஜாதி இந்துக் களின் ஆதிக்கத்திற்கு வழிவகுத்தது. எனவே, முஸ்லீம் மக்கள்தொகையின் பெரும்பகுதியினர் மட்டுமல்லாது, பெரும்பகுதி தலித்துகளும் பழங் குடியினரும் விடுதலைப் போராட்டக் களத்தி லிருந்து விலகிஇருந்தனர். இதை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்ட அந்நிய ஆட்சியாளர்கள், மத வேற்றுமைத்தீயைப் பற்றவைத்து மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைத்தனர். இறுதியில் நாட்டைப் பிளவுபடுத்துவதிலும் வெற்றி பெற்றனர். அதற்கான விலையைத்தான் நாம் இன்னமும் கொடுத்து வருகிறோம்.

மற்றொருபுறம், ஒருங்கிணைந்த சி.பி.ஐ.யும் (அதற்குள்தான் சி.பி.ஐ.(எம்) – இன்னபிற தலைவர் களும் இருந்தனர்) மதச்சார்பின்மையின் அடிப் படையில் எந்தவொரு தத்துவார்த்த – கலாச்சார போராட்டத்தையும் நடத்தவே இல்லை. மாறாக, அது தனது சந்தர்ப்பவாத ஆதாயத்திற்காக அவ்வப்போது மதத்தைப் பயன்படுத்திக் கொண்டது. அதோடு மிகவும் மோசமான இரு நாடு கருத்தியலை ஆதரித்து நாட்டைப் பிரித் ததையும் அது ஆதரித்தது. அதே போல் இன்றும் கூட, மதச்சார்பின்மை என்ற முகமூடியைப் பயன் படுத்திக் கொண்டு சி.பி.ஐ.(எம்) குறுகிய தேர்தல் ஆதாயத்திற்காக காங்கிரசோடு கைகோர்த்துக் கொள்கிறது. சாதிய–மதவாத சக்திகளோடு சந்தர்ப்பவாதக் கூட்டணி அமைத்துக் கொள்கிறது. மொத்தத்தில் தேர்தல் ஆதாயம் கிடைக்குமெனில் மதவாத சக்திகளுக்கும் அது உதவுவதற்குத் தயங்குவது இல்லை. இடதுசாரித்தனம் என்ற பெயரில் மிகமோசமான சந்தர்ப்பவாதமே அன்றி இது வேறொன்றுமில்லை.

அதே நேரத்தில், காங்கிரஸ், பா.ஜ.க. போன்ற பூர்ஷ்வா கட்சிகள், ஆளும் முதலாளித்துவ வர்க் கத்தின் ஆதரவையும் நிதிஉதவியையும் பெற்றே நடத்தப்படுகின்றன என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். ஆளும்வர்க்கம் தனது உத்தரவுகளை நிறைவேற்றுவதற்காக இவர்களை ஆட்சிக்குக் கொண்டு வருகிறது. பொதுமக்களை விஞ்ஞானபூர்வ சிந்தனையிலிருந்து விலக்கிவைப் பதற்கும் பாசிச சிந்தனைகள் ஆழமாக வேரூன்று வதற்கும் இன்று ஆளும் முதலாளித்துவ வர்க்கத் திற்கு மதவெறித்தனமும் சகிப்பின்மையும் தேவைப்படுகிறது. மதக்கலவரங்களை அவ்வப் போது பற்றவைத்து பரப்பிவிடுவது ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் நயவஞ்சக வர்க்கத் தேவையாகும், அப்போதுதானே உழைக்கும் மக்களின் பல்வேறு தரப்பினர் ஒருவரை வெறுத்துக்கொண்டும் ஈர்ப்பு இல்லாமல் பகை வெறுப்புணர்வும் கொண்டிருப்பர், அதன் மூலம் முதலாளித்துவ – எதிர்ப்பு இயக்கத்தை வளர்ப் பதற்கு தேவைப்படும் மக்களின் ஒற்றுமை சீர் குலையும். முதலாளித்துவம் இருக்கின்றவரை, மதவாதம் – அடிப்படைவாதத்தின் அபாயம் சமுதாயத்தில் இருந்துகொண்டேதான் இருக்கும். எனவே மதவாத அச்சுறுத்தலை எதிர்த்து முறியடிப்பதற்கு காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. வின் அபாயகரமான கொள்கைகளை எதிர்த்துப் போராடினால் மட்டும் போதாது, முதலாளித் துவத்திற்கு எதிராக உக்கிரமான போராட்டத்தைக் கட்டியெழுப்புவது மிகமிக அவசியமாகும்.

பெரும்பான்மை மதவாதமும் – அடிப் படைவாதமும் நாட்டிற்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கினாலும், சிறுபான்மை மதவாதமும் பழமை வாத அச்சுறுத்தலும் அதற்கு சற்றும் குறைந்த தில்லை என்பதையும் புரிந்துகொள்வது மிக அவசியமாகும். இந்து மதவாதம் அதிகம் தூண்டப்படுகையில் முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்தும் பிரிவினரும் அதிகரிப்பர். முஸ்லீம் ஒற்றுமைக்காக கூக்குரலிடுவதும் உத்வேகம் பெறும். அது, மத அடிப்படையில் இந்துக்களை ஒன்றுசேர்ப்பதற்கு இந்துத்துவா ஆதரவாளர் களுக்கு வாய்ப்பை வழங்கிவிடும். எனவேதான், பாகிஸ்தானிலும் வங்கதேசத்திலும் உள்ளான்மை இந்துக்கள் அதிக சித்திரவதைக்கு ஆளாக வேண்டும் என்று இந்தியாவில் உள்ள இந்துத்துவா குழுக்களும், இந்தியாவில் உள்ள முஸ்லீம்கள் சித்திரவதைக்கு ஆளாவது அதிகரிக்கவேண்டும் என்று பாகிஸ்தான் மற்றும் வங்கதேசத்திலுள்ள அடிப்படைவாத முஸ்லீம்களும் விரும்புகின்றனர்.

தொடர்ச்சி 7ம் பக்கம்

# கடும் விலைவாசி உயர்வுக்கு எதிராக . . .

1ம் பக்கம் தொடர்ச்சி

பட்டினியில் வாடிக்கொண்டிருக்கும்போது தங்கள் வாக்குவங்கிகளை தக்கவைத்துக் கொள்வதற்காக அனைத்த வகையான பிளவுவாதத்தையும் தூண்டி விட்டு தேர்தல் கணக்கை வகுப்பதிலும் கூட்டணி மற்றும் மறு கூட்டணியை அமைப்பதிலும் இவ் ஓட்டு வங்கி கட்சிகளின் அதிகாரவெறிபிடித்த தலைவர்கள் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

இந்த இருள்சூழ்ந்த நிலையில் மின்னும் ஒரே ஒரு ஒளிக்கீற்றாக இந்தியாவின் ஒரே உண்மை யான கம்யூனிஸ்ட் கட்சியாக எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) விளங்குவதை அவர்கள் கண்ணுற் றிருக்கிறார்கள். துன்பப்படும் மக்களுக்கு துணை நின்று மக்களின் எரியும் வாழ்க்கைப் பிரச்சினை களின் மீதான ஒன்றுபட்ட, தொடர்ச்சி யான நன்கு வடிவமைக்கப்பட்ட ஜனநாயக இயக்கத்தின் மேடையில் அவர்களை அணிதிரட்டி, அவர் களுடைய அனைத்து வாழ்க்கைப் பிரச்சினை களுக்கும் மூலமாக இருக்கின்ற இக்கொடிய முதலாளித்துவ சுரண்டலிலிருந்து விடுதலை பெறுவதற்கான பாதையை தாங்களே வகுப்பதற்கு தேவையான அரசியல் விழிப்புணர்வை அவர்கள் பெறசெய்து, உயர்ந்த பாட்டாளிவர்க்க நீதிநெறி, கலாச்சாரத்தின் மீது போராட்டங்களை நடத்தவும் மார்க்சிசம் – லெனினிசம் தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனை எனும் உன்னத பதாகையைத் தாங்கி எதிர்நீரோட்டத்தை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) மட்டுமே அளிக்கும்.

தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் என பல்லாயிரக் கணக்கில் மேற்குவங்க மாநிலத்தின் மூலை முடுக்கெங்கிலிருந்தும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)யின் அறைகூவலுக்கிணங்கி சுழன்றுவரும் விலை வாசியின் பேரழிவைத்தடுக்க கறுப்பு சந்தையையும் பதுக்கலையும் தடைசெய்தல், பெண்கள் மீதான அட்டூழியங்களை தடுக்க தகுந்த நடவடிக்கைகள் எடுத்தல், பள்ளிப்பாடங்களில் பாலியல் கல்வியை நிறுத்துதல், பள்ளிகளில் பாஸ்–பெயில் முறை நீக்கத்தை திரும்பப்பெறுதல், மின்சார கட்டண உயர்வை திரும்பப்பெறுதல் மற்றும் தங்களுடைய நியாயமான பல கோரிக்கைகளுக்காக வடக்கு கல்கத்தாவின் ஹெடுவா பூங்காவிலிருந்து நகரின் மத்திய மையத்திலுள்ள ராணி ராஷ்மோனி சாலை வரை நன்கு ஒழுங்கமைந்த அலங்கரிக்கப்பட்ட பேரணியில் நவம்பர் 12ந் தேதியன்று அணி திரண்டனர்.

மக்கள் அதிகாரம் வென்றெடுக்கப்படுவதின் அடையாளமாக 48 ஆயிரம் பேர் கொண்ட 10 கி.மீ. நெடுந்தூரம் கொண்ட இந்த ஊர்வலக் காரர்கள் நியாயமான கோரிக்கைகளுக்கு மத்திய–மாநில அரசாங்கங்கள் இணங்கும்வரை ஓயமாட்டோம்! போராட்டங்களை மேலும் மேலும் உயர்ந்த கட்டங்களுக்கு இட்டுச் செல்வோம்! என முழங்கி தங்கள் முஷ்டியை உயர்த்தினார்கள்.

மத்திய கமிட்டி உறுப்பினர்களான தோழர்கள் தேவபிரசாத் சர்க்கார், கோபால் குண்டு, சௌமன் போஸ், சங்கர் சாஹா மற்றும் மாநிலக் கமிட்டி உறுப்பினர்கள் முதல் வரிசையில் சென்றனர்.

இப்பேரணியை கடந்து சென்றோர், பார்த்துக் கொண்டிருந்தோர் பெரும்பாலானோர்க்கு இப் பேரணிப்பற்றி நன்கு தெரியும். ஏனெனில் இக் கோரிக்கைகளுக்காக மூன்று மாத கையெழுத்துப் பிரச்சாரம் கட்சியால் மேற்கொண்டபோதே அவர்கள் தங்கள் சம்மதத்தை தெரிவித்திருந் தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஒரு காலத்தில் இடதுசாரி–ஜனநாயக இயக்கத்தின் கோட்டையாக திகழ்ந்த, நாடு முழுமைக்கும் போராடும் கோடிக்கணக்கான மக்களுக்கு உத்வேக மூட்டிய கல்கத்தா நகரை உடைய மேற்குவங்க மாநிலத்தில் அனைத்தும் முடிந்து போய்விட வில்லை என்ற உணர்வு நன்கு உணரப்பட்டது. இது அறுவடைக் காலமாக இருந்தபோதும், வாழ் வாதாரத்திற்காக உழைப்பின் மூலம் வருமானம் ஈட்ட வேண்டிய கட்டாயம் இருந்தபோதும், பள்ளி களில் முழு ஆண்டுத்தேர்வு நெருங்கி வருகின்ற போதும் மேலும் அனைத்து வழிகளிலும் சீரழிவை பரப்பி இத்தேசத்தின் குறிப்பாக இளைஞர்களின் தார்மீக முதுகெலும்பை முறிக்கும் ஆட்சியாளர் களின் அத்துணை முயற்சிகளுக்கிடையிலும் மனிதசாரமும் சமூக அக்கறையுணர்வும் முற்றாக முடிந்து போய்விடவில்லை என வாழ்வின் அனைத்து பகுதி மக்களும், உத்வேகங்கொண்ட இளைஞர்களும் பெண்களும் நெஞ்சுரத்துடன் இப்போராட்ட பாதையில் பீடுநடை போட்டு முன்னேறிச் சென்றனர்.

பேரணி நிறைவுற்ற இடத்தில் நடைபெற்ற ஒரு சிறிய கூட்டத்தில் மத்தியக்கமிட்டி உறுப் பினரும் மேற்கு வங்க மாநில செயலாளருமான தோழர் சௌமன் போஸ் அவர்கள் பேசுகையில், கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லையெனில் ஒவ்வொரு வட்டத்திலும் ஒவ்வொரு பஞ்சாயத்து, முனிசிபாலிடிகள் அளவிலும் மாநிலத்தின் மக்களை அடிமட்ட வரையில் திரட்டி போராட்டம் தீவிரப்படுத்தப்படும் என்ற எச்சரிக்கையை விடுத்தார். முழு மனதோடு இப் போராட்டத்தில் குதிக்குமாறு அனைவருக்கும் அவர் வேண்டுகோள் விடுத்தார். முன்கூட்டியே தகவல் அளிக்கப்பட்டு சந்திப்பும் அரசாங்கத்தால் நிச்சயிக்கப்பட்டிருந்த போதிலும் கோரிக்கை களடங்கிய பட்டியலையும் இக்கோரிக்கைகளுக்கு ஆதரவாக 42 லட்சம் கையெழுத்துக்கள் திரட்டப் பட்ட மனுவையும் அமைச்சரிடம் ஒப்படைக்க புதிய தலைமை செயலகம் வரை சென்ற கட்சி தலைவர்களின் ஒரு பிரதிநிதிக்குழுவை சந்திக்க எந்த அமைச்சரும் அக்கறை கொள்ளவில்லை என்பது மிகவும் வெறுக்கத்தக்கதாகும். மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏளனத்துடனும் மக்கள் போராட்டங்களை அவமதிப்பது குறித்தும் சுட்டிக்காட்டி திரிணமூல் காங்கிரஸ் அரசாங்கம் எவ்வளவு ஆணவத்துடன் நடந்து கொள்கிறது என்பதையும் 'மாற்றம்' (Parivardhan) என்று உறுதி யளித்து ஆட்சிக்கு வந்த திரிணமூல் அரசாங்கத் திற்கும் முந்தைய மக்கள் விரோத பேயாட்சி சிபிஐ(எம்) அரசாங்கத்திற்கும் எவ்வித வித்தியாசமு மில்லை என்பதையும் இது நன்கு புலப்படுத்துகிறது என்றார்.

## தோழர் பிரதிபாகுமாரியின் அஞ்சலிக் கூட்டம்

# புரட்சியாளரின் மரணமும் புரட்சிக்கு ஆதரவான சூழலை உருவாக்குகிறது. புரட்சிக்காக தன்னை மேலும் அர்ப்பணித்துக்கொள்ள மக்கள் மேலும் உறுதி எடுத்துக் கொள்கின்றனர்

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)யின் பெங்களூர் மாவட்ட கமிட்டி உறுப்பினரும் நமது கட்சியின் வெகுஜன அமைப்பான அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கத்தின் (All India Mahila Samskritik Sanghatan-AIMSS) கர்நாடக மாநில தலைவருமான தோழர் பி.எஸ். பிரதிபாகுமாரி **(46)** அவர்கள் நவம்பர் **2, 2013** அன்று திடீர் மாரடைப்பால் மறைந்தார்.

மாநில அளவிலான அஞ்சலிக்கூட்டம் நவம்பர் **8, 2013** அன்று பெங்களூரில் வரதாச்சார் கலாக்ஷேத்ரா அரங்கத்தில் நடைபெற்றது. எஸ்யுசிஐ(சி) பொலிட்பீரோ உறுப்பினர் தோழர் கிருஷ்ண சக்ரவர்த்தி அவர்களும் கட்சியின் மத்தியக்கமிட்டி உறுப்பினரும் மாநில செயலாருமான தோழர் ராதாகிருஷ்ணா அவர்களும், மத்திய கமிட்டி உறுப்பினரும், ஏஐஎம்எஸ்எஸ்ன் அகில இந்திய தலைவருமான தோழர் சாயாமுகர்ஜி அவர்களும், இக்கூட்டத்தில் கட்சியின் பெங்களூர் மாவட்ட செயலாளர் தோழர் பி.ஆர். மஞ்சுநாத் அவர்களும் சிபிஐ கட்சியின் மாநிலக்கமிட்டி உறுப்பினரும் இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தலைவருமான தோழர் ஜோதி, சிபிஐ (எம்எல் – லிபரேஷன்) கட்சியின் பங்கேற்றனர். தோழர் புட்டேகவுடா, ஐக்கிய ஜனநாதன், பொதுச்செயலாளர் திரு. ஜி.கே.சி. ரெட்டி, மூத்த நாடக கலைஞர் திரு. எம்.ஜி. சோமசேகர்ராவ், பிரபல நாடக கலைஞர் திருமதி. லஷ்மி நாடேகவுடா, கார்வாட் விவசாய பல்கலைகழக பேரா. கே. சரோஜா (ஓய்வு) ஆகியோர் மலர் அஞ்சலி செலுத்தினர்.



தோழர் பிரதிபாகுமாரி

**தோழர் கிருஷ்ண சக்கரவர்த்தியின் உரை:**

தோழர் தலைவர் அவர்களே, மேடையி லிருக்கும் கட்சிகளின் தலைவர்களே சகோதர அமைப்புகளின் தோழர்களே நண்பர்களே, நமது கட்சியின் மாநில, மாவட்ட கமிட்டி உறுப்பினர்களே,

மரணம் மனித சமுதாயத்திற்கு புதிதல்ல. சமுதாயம் துவங்கியதிலிருந்து மனிதன் பிறப்பது போலவே இறப்பதும் சகஜமாக நடந்து கொண்டு தான் இருக்கிறது. ஒவ்வொரு இறப்பும் சமூகத்தில் ஒரு வெற்றிடத்தை உருவாக்குகின்றது, அதே சமயம் ஒவ்வொரு பிறப்பும் இவ்வெற்றிடத்தை நிரப்புகின்றது. ஆனால், சில நேரங்களில் சிலரின் இறப்பால் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு சமூகம் நீண்ட காலம் எடுத்துக் கொள்கின்றது.

அத்தகையதொரு மரணம் கடந்த நவம்பர் 2ம் நாள் இடி விழுந்தது போல ஏற்பட்டது. அது தான், தோழர் பிரதிபாகுமாரியின் மரணம். அவர் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பெங்களூர் மாவட்டக் கமிட்டியின் உறுப்பினரும் அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கத்தின் (AIMSS) கர்நாடகா மாநிலத் தலைவரும் ஆவார். இடி விழுந்தது என்றால் என்ன என்பதை, அந்தப் பழமொழியின் உண்மையான பொருளை அன்று அவரின் மரணத்தைப் பார்த்தவர்கள் மற்றும் கேள்வியுற்றவர்கள்கூட புரிந்துகொள்ளமுடிந்தது. திடீரென, சற்றும் எதிர்பாராதவிதமாக எவரும் நம்பமுடியாதவாறு அந்த மரணம் நிகழ்ந்து விட்டது.

மடிந்துகொண்டிருக்கும் சமுதாயத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். உயர்ந்த, உன்னதமான மதிப்புகள் இங்கு இறந்துகொண் டிருக்கின்றன. மனித மதிப்புகள் இறந்து கொண் டிருக்கின்றன. இத்தகையதொரு சமுதாயத்தில் பாட்டாளிவர்க்க புரட்சிகர மதிப்புகளால் ஆட் கொள்ளப்பட்ட உயர் குணம் கொண்ட மனிதனை சிருஷ்டிப்பது ஒரு கடினமான போராட்டமாகும். அத்தகையதொரு போராட்டத்தின் உருவாக்கம் தான் தோழர் பிரதிபாகுமாரி. அவர் ஒரு சாதாரண பெண்ணாகத்தான் கட்சிக்கு வந்தார். ஆனால், நேர்மையான, உண்மையான தேடல் மனதுடன் வந்தார். இக்காலக்கட்டத்தின் மிக உயர்ந்த ஆறிவைப் பெறஉதவும் உன்னத தத்துவ மாகிய மார்க்சிசம்–லெனினிசம் தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனைகள் என்ற தத்துவத்துடன் தொடர்பு ஏற்பட்டதால் மனிதனை மேன்மையுள்ள வனாக்கும் பாட்டளிவர்க்க புரட்சிகர உயர் மதிப்புகளை தனது வாழ்க்கைப் போராட்டத்தின் மூலம் அவர் அடைந்தார்.

அவர் மரணத்தால் ஏற்பட்ட இழப்பு கட்சிக்கு மட்டுமல்ல; ஆம் கட்சிக்கு மிகப்பெரிய இழப்பு தான். ஆனால் சமுதாயத்திற்கும் அது மிகப்பெரிய இழப்பாகும்.

சமுதாயம் இன்று புரட்சியை வேண்டி ஏங்கு கிறது. ஆனால் புரட்சிக்கான சூழலை யார் உருவாக்குவார்கள்? எங்கே இருக்கிறார்கள் அந்தப் புரட்சியாளர்கள்? நாம் அவர்களை விரல் விட்டு எண்ணிவிடமுடியும். புரட்சி என்ற ஒட்டுமொத்த சமூகத்தின் தேவையை ஒப்பிடும்போது புரட்சி யாளர்களாகிய நாம் மிகக் குறைவானவர்களே. நமது கட்சியின் தொடர்பில் வருபவர்கள் புரட்சி கர இயக்கங்களில் ஈடுபடுவார்கள். புரட்சிகர குணத்தை கைப்பெறவைக்கும் கட்சியின் செயல் முறைபோக்கிற்கு தன்னை சமர்ப்பித்துக் கொள்வார்கள். அதன்மூலம் இத்தகைய புரட்சி யாளர்களாக தொடர்ந்து உருவாவார்கள் என்ற நம்பிக்கை இருந்தாலும், நம் முன்னுள்ள மிகப் பெரிய கடமையை நிறைவேற்ற இந்த எண்ணிக்கை போதாதுதான்.

எனவே, அத்தகைய வெகுசிலரில் ஒருவர் மறைந்துவிட்டால்கூட அது மாபெரும் இழப் பாகும். இங்குக் கூடியிருக்கும் பலர் தோழர் பிரதிபாகுமாரி தனது இளம் வயதில் கட்சிக்கு வந்தார் என்பதை அறிவர். மங்களூரிலிருந்து கிட்டத்தட்ட ஒரு கிராமப் பின்னணியிலிருந்து அவர் வந்தார். படிப்புத்தகுதி அவ்வளவாக இல்லாதவர். கட்சியில் சேருமுன் அவர் பாலிடெக்னிக் முடித்திருந்தார். அவர் அதிகம் படித்தவரல்ல. ஆனால் அவரிடம் ஏற்கெனவே சில நன்மதிப்புகள் இருந்ததால் மேலும் புதிய உயர்ந்த, பாட்டாளிவர்க்க புரட்சிகர வாழ்க்கை மதிப்புகளால் அவர் ஈர்க்கப்பட்டார்.

தனது தனிப்பட்ட அபிலாஷைகளையும் சொந்தபந்தங்களையும் பதவிபட்டங்களையும் உதறித்தள்ளி அவர் கட்சியில் சேர்ந்தார். கட்சியில் சேர்ந்தது முதல் அவற்றை திரும்பிப் பார்த்ததே யில்லை. தங்களை அடிக்கடி சந்திக்க வராததால் தங்கள்மீது அவளுக்கு பாசமும் நேசமும் இல்லை போலும் என அவரது குடும்பத்தினர் எண்ணினர். ஆனால், தனது பெற்றோர், சுற்றத்தார்மீது ஆழ்ந்த அன்பு கொண்டிருப்பதனால்தான் அதேபோன்று சமுதாயத்தின் பல பெற்றோர்கள் படும் பாட்டைக் கண்டு அவர்களின் வலியையும் துன்பத்தையும் ஒருவர் உணர்கிறார் என்பதை நாம் அறிய வேண்டும். இவ்வாறுதான் மனிதர்களின் இன்றைய கஷ்டங்கள் முடிவுக்கு வரும், புதிய நாகரிகத்தை உருவாக்கும் சமூகப் புரட்சிக்கான ஒரு சமூக இயக்கத்திற்குள் ஒருவர் உண்மையில் இழுக்கப்படுகின்றார். யாரெல்லம் அனைத்து பெற்றோர்களையும் மக்களையும் நேசிக் கிறார்களோ அவர்களே தன்னுடைய சொந்த பெற்றோரையும் சுற்றாரையும் உண்மையில் நேசிக்கிறார்கள். தோழர் பிரதிபாகுமாரி அத்தகைய வார்ப்பில் உருவான புரட்சியாளர் ஆவார்.

முதலாளித்துவம் தனது உச்ச வளர்ச்சியை அடைந்ததுடன் பிற்போக்காகி, மடிந்து, அழுகத் துவங்கிவிட்டது என லெனின் ஒரு நூற் றாண்டுக்கு முன்பே காட்டிவிட்டார். ஒரு அமைப்பு அழியும்போது அதன் கருவறையில் புதியதொரு சமுதாயத்தை பிறப்பித்துவிட்டுச் செல்கிறது என்பதையும் அவர் எடுத்துக் காட்டி னார். எனவேதான் இந்த காலகட்டத்தை ஏகாதி பத்திய காலகட்டம் என்றதுடன் ஒருங்கே அது பாட்டாளிவர்க்கப் புரட்சியின் காலகட்டமும் கூட என சேர்த்தே சொன்னார்.

இரஷ்யாவில் பாட்டாளி வர்க்க புரட்சியை நடத்திக்காட்டியதன் மூலம் சோசலிசப் புரட்சி என்பது கற்பனையல்ல யதார்த்தமே என்பதை லெனின் நிரூபித்துக் காட்டினார். மேலும், இயற் கையில் குணாீதியான மாற்றம் தானாகவே ஏற்படுவதுபோன்று சமுதாயத்தில் மாற்றம் தானாகவே நடந்துவிடுவதில்லை என்பதையும் லெனின் சுட்டிக் காட்டினார். இங்கு விழிப் புணர்வு முன்னணிப் பாத்திரம் வகிக்கிறது என்றார். விழிப்புணர்வுடன் கூடிய செயல்பாடில் லாமல் விழிப்புணர்வுடன்கூடிய போராட்டம் இல்லாமல் சமுதாயத்தில் புரட்சி வருவதில்லை. அதற்கு புரட்சியாளர்கள் தேவை. ஆனால் இவ் விஷயத்தை வெறுமனே தியரியாக புரிந்து கொண்டால்மட்டும் புரட்சியை நம்மால் நடத்தி விடமுடியாது. அதற்கு நாம் அதற்குரிய வாழ்க் கையை வாழவேண்டும். அத்தகைய வாழ்க்கையை நாம் துணிந்து தரித்துக்கொள்ள வேண்டும். ரஷ்யா, சீனா, வியட்நாம், கியூபா என புரட்சி நடந்த எல்லா நாடுகளிலும் இந்த குறிப்பிட்ட வாழ்க்கை கோட்பாட்டையும் மதிப்புகளையும் பின்பற்றுவதில் புரட்சியாளர்கள் தத்தமது பங்கை ஆற்றியுள்ளனர். நமது சமுதாயத்தில் தோழர் சிப்தாஸ் கோஷ் அத்தகைய போராட்டத்தை வளர்த்தெடுத்தார். கட்சி என்றால் அது சில தனிநபர்களின் கூட்டமல்ல; அது ஒரு செய்முறை. சிந்திப்பதற்கும் செயல்படுவதற்கும் கடைப்பிடிக்க வேண்டிய செய்முறை. அதுதான், இயக்கயியல் சிந்தனை முறையும் கூட்டாக பணியாற்றும் முறையுமாகும். மகிழ்ச்சியாகவும் தன்னார்வத் துடனும் முழுமையாகவும் இந்த செய்முறைப் போக்கிற்கு நம்மை சமர்ப்பித்துக் கொள்வதன் மூலம் மட்டுமே இந்த செய்முறையின் மிகச் சிறந்த விளைபொருளாக நாம் உருவாகமுடியும். உயர்ந்த மதிப்புகளை பாட்டாளிவர்க்க புரட்சியின் மதிப்புகளை கற்றுப்பெறுவதன் மூலமே ஒருவர் இன்று உயர்ந்த குணத்தை அடைவார்.

பிரதிபாகுமாரி இச்செய்முறையைப் பின்பற்றியே போராடினார். அவரின் வாழ்க்கைப் போராட்டம் மிகவும் தீர்மானகரமாக திகழ்ந்தது. இந்த உயர்ந்த கலாச்சாரத்தை விரைந்துபெற்று உயர்ந்த தரத்தை அடைந்தார். எனவேதான் அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கத்தின் (AIMSS) கர்நாடகா மாநில தலைவராக தேர்ந் தெடுக்கப்பட்டார். மேலும் அவர் கட்சியின் பெங்களூர் மாவட்ட கமிட்டியின் உறுப்பினரும் ஆவார். அவர் எவ்வளவு மென்மையானவர், இனிமையானவர் என்பதை அவரை அறிந் தவர்கள் அறிவர். அதேசமயம் அவர் எவ்வளவு தீர்மானகரமானவர், வைராக்கியம் கொண்டவர் என்பதையும் அவர்கள் அறிவர். கட்சியின் வழி காட்டுதலில் எந்தளவிற்கு அவர் புரிந்துகொண்டு முடிவெடுத்திருந்தாரோ, அந்தளவிற்கு அவர் அதில் உறுதியாக இருந்தார். தன் வாழ்நாள் முழுதும் அற்ப சில்லரை விஷயங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு இருந்தார். மக்கள் இயக்கங்களில் முன்னிலை வகித்தார். கட்சியின் வழிகாட்டுதலில் அவர் பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப்படிப்பை முடிக்கும் அதேசமயம் மாணவர்களை கல்வி மற்றும் சமூக இயக்கங்களில் திரட்டினார்.

பெரும்பான்மை பெண்கள் அடிமையாக அடிபணிந்து, எந்த சுதந்திரமுமில்லாமல் வாழும் நம்மைப் போன்ற ஒரு பின்தங்கிய நாட்டில், நம்மைப் போன்ற ஒரு சமுதாயத்தில் இத்தகைய நபரை அதுவும் ஒரு பெண்ணை காண்பது மிகவும் அரிதாகும். சுதந்திரப்போராட்டதின் போதே நிலப் பிரபுத்துவ பழமைவாத கருத்துக்கள் முறியடிக்கப் படவில்லை. அத்தகைய நிலப்பிரபுத்துவ கருத்துக்கள், நிலப்பிரபுத்துவ பழக்கவழக்கங்கள்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# தோழர் பிரதிபாகுமாரியின் அஞ்சலிக் கூட்டம்

3ம் பக்கம் தொடர்ச்சி

கலாச்சாரம், குறிப்பாக பெண்கள்மீதான நிலப் பிரபுத்துவ அணுகுமுறையும் கருத்துக்களும் இன்னமும் நிலவுகின்றன. நாட்டில் என்ன




**எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)யின் பொலிட்பீரோ உறுப்பினர்**
***தோழர் கிருஷ்ண சக்கரவர்த்தி உரையாற்றுகிறார்***

நடந்துகொண்டிருக்கிறது என்பதைப் பாருங்கள். சாதியவாதம், மதவாதம், நிலப்புரபுத்துவம், பிராந்திய வெறிவாதம், மொழிவெறிவாதம் அனைத்தும் வளர்ந்துவருகின்றன. இச்சமுதாயத்தில் நிலப் பிரபுத்துவ எச்சங்களை போராடிக் களைவது எளிதல்ல. அதைவிட இத்தகைய சமூகத்தில் ஒரு பெண்ணை புரட்சியாளர் ஆக்குவது பெரிய காரியம் மட்டுமல்ல, மிக மிகக் கடினமானது ஆகும். தோழர் சிப்தாஸ் கோஷின் புரட்சிகர சிந்தனைகளை பெறுவதன் மூலம்தான் நம் நாட்டின் பெண்கள் புரட்சிகர குணத்தையும் கண்ணியத்தையும் அடையமுடியும். அதனால்தான் நமது கட்சியில் அதிக பெண் புரட்சியாளர்களை மக்கள் காண்கிறார்கள்.

தோழர் பிரதிபாகுமாரி காலமான செய்தி செய்தித்தாள்களில் வெளியானதை அடுத்து ஏராளமானோர் துக்கம் தெரிவித்தனர். தங்களுக்கு நேர்ந்த இழப்பை, சமுதாயத்திற்கு நேர்ந்த இழப்பை உணர்ந்தனர். அனைத்து மக்களின் போராட்டமும் சமுதாய மாற்றத்தை உருவாக்கும். ஆனால் ஒரு பின்தங்கிய நாட்டில், புரட்சிகர இயக்கத்தில் பெண்கள் முன்வரும்போது அதன் தாக்கம் அதிகமானதாகும். இந்த கர்நாடக மாநிலத்தில் ஏற்படும் மாற்றங்கள் நிச்சயமாக எமது போராட்டங்களின் உருவாக்கமாகும். இந்த மாற்றங்களில் எமது பெண் தோழர்கள் ஆற்றியுள்ள பங்கு தனிச்சிறப்பு வாய்ந்ததும் மிக முக்கயமானதும் அளப்பரியதுமாகும். இதே பெங்களூர் நகரத்திற்கு நான் முதல் முதலில் **1965 – 66**ல் வந்த பொழுது சமுகசூழலில் எத்தகைய அரசியல் மந்தநிலை நிலவியது என்பதை இன்று நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியாது. அன்றைய சூழ்நிலையுடன் இன்றைய நிலையை ஒப்பிட்டுப் பார்ப்பீர்களானால் உங்களுக்கு இந்த வேறுபாடு புலப்படும். இன்று பெங்களூரில் மக்களின் வாழ்க்கைப்பிரச்சினைகளை முன்வைத்து ஏராளமான இயக்கங்கள் நடைபெறுகின்றன. இதற்குக் காரணம் நமது போராட்டமாகும். இந்த உண்மையையும் இந்த இயக்கங்களில் நமது பெண் தோழர்கள் ஆற்றியுள்ள மகத்தான பணிகளையும் வரலாறு ஒருநாள் அங்கீகரிக்கும். பிரதிபாகுமாரி அவற்றில் ஒருவர் ஆவார்.

தோழர்களே, வாழ்க்கையில் நிச்சயமானது என ஒன்று இருக்குமானால் அது மரணம்தான். நாம் எல்லோரும் மரணத்தை மட்டுமே நிச்சயமாக அனுபவிக்கப் போகிறோம். மனிதன் தனது சிந்தனைச் சக்தியை பயன்படுத்தி வரலாற்றுரீதியாக தீர்மானிக்கப்பட்ட இலக்குடன் சரியான வாழ்க்கைப் பாதையில் சரியான செய்முறையில் போராடினான் என்றால் அவன் மார்க்ஸைப் போன்ற மிகப்பெரிய சிந்தனை சக்தி கொண்டு மகத்தான மனதை (mind) அடைய முடியும். இது சாத்தியமே, உண்மையே. ஆனால் வெறுமனே நமது விருப்பத்தால் மட்டும், எந்த வகையிலானதொரு போராட்டத்தாலும் நாம் மார்க்ஸைப் போன்று உருவாக முடியுமா? முடியாது. மார்க்ஸ் நடத்திய அதே வாழ்க்கைப் போராட்டத்தை கடைப்பிடித்துத்தான், சரியான இயக்கயியல் பொருள்முதல்வாத கண்ணோட்டத்துடன் அவர் கைக்கொண்ட போராட்ட செய்முறையை கடைப்பிடித்துத்தான், முழுமையாக புரட்சிக்கு தன்னை அர்ப்பணித்துத்தான் ஒருவர் மார்க்ஸாக ஆக முடியும். மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ, சிப்தாஸ் கோஷ் ஆகிய அனைவரும் இத்தகைய போராட்ட செய்முறையின் உருவாக்கங்களேயாவர்.

தோழர்களே, மனிதன் என்பவன் ஒரு செய்முறையின் உருவாக்கமாகும். அவன் வெற்றிடத்தில் வாழவில்லை. சிந்தனைக்கும் செயல்பாட்டிற்கும் கட்சி ஒரு செய்முறையை வளர்த்தெடுத்திருக்கிறது. இச் செய்முறை ஒரு மனிதனை கம்யூனிஸ்ட் ஆக்குகிறது. கட்சி செயல்முறைக்கு நாம் மகிழ்ச்சியுடன் தன்னார்வத்துடன் முழுமையாக சமர்ப்பித்துக்கொள்ளவில்லை என்றால் சிந்தனைக்கும் செயல்பாட்டிற்கும் கட்சிக்கு வெளியில் இருக்கும் வேறொரு செயல்முறையை, பூர்ஷுவா செய்முறையை கடைப்பிடிப்பவராவோம். ஒரு மனிதனை சிறந்த கம்யூனிஸ்டாக மாற்றாது. பிரதிபாகுமாரி இந்த உண்மையைப் புரிந்துகொண்டு தன்னை மகிழ்ச்சியுடன் கட்சி செயல்முறைக்கு சமர்ப்பித்துக் கொண்டு மிகப்பெரிய வளர்ச்சிக்கும் சாதனைக்கும் தன்னை தயார்படுத்திக்கொண்டு வந்தார். நாம் அவரை இழந்துவிட்டோம். எவ்வளவு விரைவாக அந்த இடத்தை நீங்கள் நிரப்புவீர்கள் என்பது உங்களையே சாரும். தோழர்களே, இந்தப் போராட்டப் பாதைக்கு எவ்வளவு விரைவாக இளைஞர்களை, இளம் ஆண்கள் மற்றும் பெண்களை, கொண்டு வருவீர்கள், எவ்வளவு விரைவாக நீங்கள் உங்களை வளர்த்துக் கொள்வீர்கள் என்பதைப் பொறுத்துத் தான் நமது முன்னேற்றம், உயர்வு, வளர்ச்சி, விரிவாக்கம் அனைத்தும் சார்ந்திருக்கிறது.

அவரது மறைவு இத்தேவையை உருவாக்கியிருக்கிறது. கட்சியின் உன்னத தத்துவத்தை, உயர்ந்த கலாச்சாரத்தை கண்டு பல இளம் ஆண்களும் பெண்களும் கட்சிக்கு வந்துகொண்டிருக்கின்றனர். இப்போராட்டத்தை தங்கள் வாழ்க்கையில் நடத்திக் கொண்டிருக்கின்றனர். இப்போராட்டம் தொடர்ந்தால் பிரதிபாகுமாரியைப் போன்று பல புரட்சியாளர்கள் உருவாவது நிச்சயம். இது நிச்சயம் நடக்கும். ஆனால் இப்போராட்டத்தை கைவிட்டு விட்டால் இது நடக்காது. ஒருவர் எப்படிப்பட்டவராக உருவாவார் என்பதை அவர் மேற்கொள்ளும் போராட்டமே தீர்மானிக்கிறது. நீங்கள் பிரதிபாகுமாரியிடமிருந்து எதையாவது கற்றுக் கொள்ளவேண்டுமென்றால் அவரின் இப் போராட்டத்தைத்தானாகும். அவர் போராட்டத்தில் உயிரோட்டத்துடன் இருந்ததால்தான் அவரிடம் ஏராளமான திறன்களும் சாத்தியங்களும் இருந்தன. அவர் ஒரு சிறந்த தோழராக உருவாகமுடிந்தது. மரணம் அவரை திடீரென இப்போராட்டத்திலிருந்து பறித்துவிட்டது.

அத்தகைய சோக சம்பவங்கள் நமது கட்சியில் ஏற்கெனவே நடந்திருக்கின்றன. மிகவும் வளர்ச்சி பெற்ற தோழர் ரத்தன் முகர்ஜி கூட இவ்வாறு மிகச் சமீபத்தில்தான் அகால மரணமடைந்தார். அவர் கீழே விழுந்தார், அனைத்தும் முடிந்துவிட்டது. அவரின் போராட்டத்தை அங்கீகரித்து மரணத்திற்குப் பின் அவருக்கு கட்சி ஸ்டாஃப் உறுப்பினர் வழங்கியது. நீங்கள் அனைவரும் நன்கு அறிந்த, தமிழ்நாட்டில் பல ஆண்டுகள் பணிபுரிந்த, தோழர் சௌரவ் போஸ் திடீரென்று மாரடைப்பு வந்து கீழே விழுந்து இறந்துவிட்டார். இவை அனைத்தும் கட்சிக்கும் புரட்சிக்கும் அளப்பரிய இழப்பை ஏற்படுத்திவிட்டன.

பூர்ஷுவா சமுதாயத்தில் இரண்டு காரணங்களால் விஞ்ஞானம் தடையின்றி வளராது. முதற் கண், தங்களின் அதிகபட்ச லாப நோக்கத்தை அடைய பூர்ஷுவாக்கள் விஞ்ஞானத்தை கட்டுப்படுத்துகின்றனர். அறிவியல் ஆராய்ச்சி எந்த திசையில் எந்த துறையில் செல்லவேண்டும் என ஆலை அதிபர்கள்தான் தீர்மானிக்கின்றனர். விஞ்ஞானிகளுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் உண்மையில் சுதந்திரமில்லை. இரண்டாவதாக, இந்த பூர்ஷுவா சமுதாயத்தில் கொடுக்கப்படும் கல்வி, விஞ்ஞான மனப்பான்மையை வளர்ப்பதில்லை. நிலவும் சமுதாயச் சூழலிலிருந்து பெற்று சுமந்துகொண்டிருக்கும் முன்னபிப்பிராயங்கள், மூடநம்பிக்கைகளிலிருந்து மாணவர்களையும்கூட விடுவிக்கவில்லை. இயற்கையாகவே பெரும்பாலான விஞ்ஞானிகள் மருத்துவர்களெல்லாம் முன்னபிப்பிராயங்களிலிருந்து (prejudices) விடுபட்டிருப்பதில்லை. நீண்ட காலத்திற்கு முன்பே எங்கல்ஸ் சுட்டிக்காட்டியதுபோல வெகுசில விஞ்ஞானிகள் தான் இப்பருப்பொருள் உலகை இயக்கயியல் அணுகுமுறை கொண்டு அணுகுகின்றனர், இயக்கயியல் வழிமுறையைப் பின்பற்றி ஆய்வு செய்கின்றனர். இந்த வழிமுறை ஒன்றுதான் இப்பருப்பொருள் உலகின் உண்மையை கண்டுபிடிக்க உதவும்.

சமுதாயம் முதலாளித்துவ சுரண்டல் அமைப்பிலிருந்து என்று விடுபடுகிறதோ, சோஷலிசம் என்று வருகிறதோ, விஞ்ஞானம் என்று முன்னபிப்பிராயங்களிலிருந்தும் மூடநம்பிக்கைகளிலிருந்தும் விடுபடுகிறதோ, அது தங்குதடையற்ற வளர்ச்சி அடைகிறதோ அன்று இத்தகைய அகால மரணங்கள் நிகழாது. சோஷலிசத்தில் விஞ்ஞானத்தின் வளர்ச்சி மனிதன் நீண்ட நாள் ஆரோக்கியமாக வாழ உதவும். ஆக ஆரோக்கிய வாழ்க்கை வாழ்வதற்குக்கூட புரட்சி தேவைப்படுகிறது.

ஏழைகள்தான் புரட்சிக்காக போராடுவார்கள் என பலர் தவறாக நினைக்கிறார்கள். அது சரியான புரிதல் அல்ல. சமுதாயத்தின் யதார்த்த விதிகளால் புரட்சி நடக்கின்றது. இதைப்பற்றிய விழிப்புணர்வு பெற்றவர்கள் புரட்சியாளராகின்றார்கள். மார்க்ஸ் ஒரு ஏழையல்ல. உயர் நடுத்தர வர்க்கத்திலிருந்து அவர் வந்தார். ஏங்கெல்ஸ் ஒரு தொழிலதிபர் குடும்பத்திலிருந்து வந்தார். லெனினும் உயர் நடுத்தர வர்க்கத்திலிருந்து வந்தவரே. இன்றைய புரட்சி, வரலாற்றுரீதியாக பாட்டாளிவர்க்கப் புரட்சியாகும். இதனை பாட்டாளிவர்க்கத் தலைமையில்தான் வென்றெடுக்க முடியும். புரட்சி என்பது ஏழைகள் சம்பந்தப்பட்ட விஷயம் என்று யாரெல்லாம் கூறுகின்றனரோ அவர்கள் புரட்சி என்ற கோட்பாட்டை கொச்சைப்படுத்துகின்றனர். யாரெல்லாம் சமூக மாற்றத்தைப்பற்றி கவலைப் படுகின்றனரோ, உண்மைக்காகவும் நியாயத்திற்காகவும் போராடுகின்றனரோ உயர்ந்த மனித மதிப்புகளை நேசிக்கின்றனரோ அவர்கள் புரட்சிக்காக வருகின்றனர். கம்யூனிச வழியிலான போராட்டம் ஒரு உன்னதமான போராட்டமாகும். முதலாளித்துவ இலாப நோக்கம் என்ற உந்துசக்தியிலிருந்து விஞ்ஞானத்தை விடுவிக்காதவரை உண்மையான வளர்ச்சி ஏற்படாது என்பதை விஞ்ஞானம் எவரும் புரிந்து கொள்ள வேண்டும். சுரண்டுவோரின் இலாபப் பேராசையிலிருந்து விடுவிக்கப்படும்போது அன்றிலிருந்து இத்தகைய வேதனைமிகுந்த மரணங்கள் நிகழாது.

ஆகவே இத்தகைய உன்னத போராட்டத்திற்காக பிரதிபாகுமாரி தனது வாழ்க்கையை அர்ப்பணித்து உயிர்துறந்தார். அவர் விடுத்துச் சென்ற கடமைகளை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். தோழர்கள் இப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

புரட்சியை யதார்த்தமாக்க வெற்றிபெறச் செய்ய பல நூறு பல ஆயிரம் பிரதிபாகுமாரிகளை உருவாக்க நீங்கள் இப்போராட்டத்தை மேன்மேலும் முன்னேற்றி எடுத்துச் செல்லவேண்டும். அப்போராட்டத்தை நாம் கையில் எடுக்கும் பொழுதுதான் நாம் அவருக்கு உண்மையான புரட்சிகர அஞ்சலி செலுத்தமுடிந்தவராவோம். இது ஒரு உன்னத வாழ்க்கை, கம்யூனிச வாழ்க்கையன்றோ.

பிரதிபாகுமாரி தன்னுடைய குழந்தை மேக்னாவை விட்டுச்சென்றுவிட்டார். நமது கட்சியின் ஆதரவாளர்கள் நல விரும்பிகள் பலரும் அவளுக்கு என்னவாகுமோ என்று ஆழ்ந்த கவலை தெரிவிக்கின்றனர். அவர்களின் கவலை, பிரதிபாகுமாரி மீதும் அக்குழந்தைமீதும் அவர்கள் கொண்டிருக்கக் கூடிய ஆழ்ந்த நேசத்தை, அக்கறையைக் காட்டுகின்றது. ஒரு சாதாரண குடும்பத்தில் தாய் இறந்தால் அது குழந்தைக்கு மிகப்பெரிய இழப்பு. அதனை அவ்வளவு எளிதாக ஈடுசெய்யவே இயலாது என்பதை நம்மைப்பற்றி நன்கு அறிந்தவர்கள் குறிப்பாக கட்சி மையத்தில் தங்கியிருக்கும் தோழர்களுக்குத் தெரியும். ஆனால் நமது கட்சி மையத்தில் ஒரு தாய் இறந்தால் அது மிகப் பெரிய இழப்பு தான் என்பதில் ஐயமில்லை. ஆனால் கட்சியில் அக்குழந்தைக்கு பல தாய்மார்கள் இருக்கின்றனர். இழப்பினால் வலி இருக்கும்தான். ஆனால், அந்த வெற்றிடத்தை நிரப்பிவிடமுடியும். ஏராளமான தாய்மார்கள், உண்மையான தாய்மார்கள், நன்னெறிகொண்ட தாய்மார்கள் கம்யூனிச இயக்கத்தின் மாபெரும் உருவாக்கமாகும். நான் எனது குழந்தையை நேசிக்கிறேன்; மற்றவரின் குழந்தைமீதும் எனது நேசம் குறைந்ததல்ல. இத்தகைய வாழ்க்கைக் கோட்பாடு எல்லா நெறியின் அடிப்படையிலான உறவுகளிலும் உண்டு. பூர்ஷுவா மனிதநேயமும் உறவு குறித்த இந்த நன்னெறி கோட்பாட்டை சமுதாயத்தில் கொண்டுவந்தது. பூர்ஷுவா மனிதநேயத்திலும் பரஸ்பர மதிப்புகளின் போற்றுதலே நெறியைத் தழுவிய உறவுகளின் அடிப்படையாகும். ஆனால் இது தனிமனித வாதத்தின், தனிமனித சுதந்திரத்தின் அடிப்படையில் இருப்பதால் இரண்டு வெவ்வேறு மனிதர்கள் இருவேறு உலகக் கண்ணோட்டத்தைக் கொண்டிருக்க சுதந்திரம் உண்டு. அப்பொழுது அவர்கள் நெருக்கமாக இருக்கலாம். இருப்பினும் யதார்த்தத்தில் அவர்களால் வாழ்க்கையில் ஒத்துப் போக முடியாது. இரு வேறுபட்ட கண்ணோட்டத்துடன் அவர்கள் இரு வேறுபட்ட இலக்கை நோக்கித்தான் பயணிப்பார்கள். மாறாக, கம்யூனிஸ்டுகளுக்குள் உறவு என்பது மிகவும் நெறிமுறை கொண்டதாகும். அது மிகவும் உயர்ந்த மதிப்புகளை நெறிகளைக் கொண்டதாகும். இவர்களிடையே உறவு என்பது ஒரே தத்துவார்த்தக் கண்ணோட்டத்தைக் கொண்டு ஒரே சித்தாந்தத்தை ஒரே

தொடர்ச்சி 7ம் பக்கம்

# அமெரிக்கா உளவு பார்க்கும் விவகாரம்: அழுகிவரும் முதலாளித்துவத்தின் கொலைபாதக வெறித்தனத்தை அம்பலப்படுத்துகிறது

சமீபத்தில், பல்வேறு விஷயங்கள் அம்பலமாகி தொடர்ச்சியாக வெளிவருவதைக் கண்டு உலகம் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளது. சமீபத்தில் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஏஜென்சியின் (NSA) பெரிய அளவிலான சர்வதேச கண்காணிப்பு திட்டமான, 'பிரிசம்' PRISM குறித்து மக்கள் அறிய வந்தனர். இந்த உளவு பார்க்கும் திட்டத்தின் உதவியுடன் தகவல் சேகரிக்கும் அமைப்பின் மூலம் தேசிய பாதுகாப்பு ஏஜென்சி எப்படிக் கருத்துக்களைப் பதிவு செய்கிறது, 'சூழ்நிலைதான் இளைஞர்களை தீவிரவாதத்தை நோக்கித் தள்ளுகிறது' என்று இரண்டு நபர்கள் தங்களுக்குள் தனிப்பட்ட முறையில் சாதாரணமாக பேசிக்கொள்வதைக்கூட பதிவு செய்து, தங்களுக்கு சாதகமான தருணத்தில் அவர்கள் தீவிரவாதத்திற்கு ஆதரவு தருபவர்கள் என்று சுட்டிக்காட்டக்கூடும் என்று எண்ணி உலக மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

உளவு பார்ப்பது, குறிப்பாக போர்க் காலங்களில் வேவு பார்ப்பது நீண்டகாலமாக இருந்து வரும் நடைமுறை என்பது உண்மைதான். ஆனால் இப்போது வெளிப்பட்டிருப்பது உளவு பார்ப்பது மட்டுமல்ல, இவை மிகவும் மோசமானவை, ஆபத்தானவை. உலகில் உள்ள இண்டர்நெட், தொலைபேசி – நில வழி மற்றும் மொபைல் – தரவு மற்றும் கேபிள் (கம்பி வட) வழித்தடங்கள் என அனைத்தும் இடைமறித்து பதிவு செய்து சேகரிக்கப்படுகின்றன; வெரிசோன், ஏடி & டி போன்ற பெரிய தொலைபேசி நிறுவனங்களும், கூகுள், மைக்ரோசாஃப்ட், யாஹூ, ஆப்பிள், ஃபேஸ்புக் போன்ற இணைய நிறுவனங்களெல்லாம் யதார்த்தத்தில் அமெரிக்க பாதுகாப்பு ஏஜென்சியின், இல்லை இல்லை அமெரிக்க அரசாங்கத்தின் கருவிகளாக பயன்படுத்த முடியும்.

அதோடு தனிநபர் சம்பந்தப்பட்ட விஷயங்களை (Privacy சிந்திப்பதற்கும் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குமான தனிநபர் சுதந்திரம் என்று படிக்கவும்) அல்லது தூதரக பாதுகாப்பு போன்ற வார்த்தைகள் எல்லாம் தேசியப் பாதுகாப்பு ஏஜென்சியின் இத்தகைய அத்துமீறலால் அர்த்தமற்றவையாகிவிட்டன. இந்த அச்சுறுத்தல் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய மக்களுக்கு மட்டுமல்லாது இணையதளம், அல்லது தொலைபேசி அல்லது சமூக வலைதளங்களில் புகுந்து விளையாடுவோர், ஏன் சமீபத்தில் அம்பலமாகியுள்ளதுபோல் ஜெர்மன் அதிபர் மற்றும் பிரேசில் அதிபர் போன்ற உலகத் தலைவர்கள் என அனைவருக்கும் அச்சுறுத்தலாக உருவாகியுள்ளது. இதில் சுவாரஸ்யம் என்னவெனில் இங்கு குறிப்பிட்டுள்ள இரண்டு உலகத் தலைவர்களும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வரையறைப்படி 'தீவிரவாதிகள்' அல்லர் என்பது மட்டுமல்ல; மாறாக இவர்கள் இருவரும் அமெரிக்க ஆட்சியாளர்களின் மிக நெருங்கிய கூட்டாளிகள்.

இயங்கிவரும் எந்தவொரு பெரிய சர்வரையும் இடைமறித்து உள்ளே நுழைவதற்காக 'மஸ்குலர்' (MASCULAR) என்ற ஒரு திட்டம் இருக்கிறது என்றும் அதில் இங்கிலாந்தின் ஜி.எஸ்.எச்.க்யு. (GSHQ) வும் ஒரு கூட்டாளி என்றும் வாஷிங்டன் போஸ்ட் அறிக்கை தெரிவிக்கிறது. ஆக, பிரதான குற்றவாளியான அமெரிக்க ஏகாதிபத்தியம் தனியாக மட்டும் இதைச் செய்யவில்லை, இதில் தனக்குத் துணையாக ஏகாதிபத்தியக் கூட்டத்தையே சேர்த்து வைத்துள்ளது. அவர்களுடைய முகத்திரைகளைக் கிழிக்கும் விதமாக சிலர் ரகசிய விஷயங்களை அம்பலத்துக்கு கொண்டு வருவோர் (Whistleblowers) என்ற அமைப்பை உருவாகியுள்ளனர். இவர்கள் கடுமையான தாக்குதலுக்கும் ஆளாகிவருகின்றனர். இதில் ஈராக்கில் அமெரிக்க ராணுவம் நடத்திய கொடுமைகளையும் கொலைகளையும் அம்பலப்படுத்தும் ஆவணங்களை விக்கிலீக்ஸ் – க்கு அளித்தமைக்காக அமெரிக்க தனியார் ராணுவத்தைச் சேர்ந்த ப்ராட்லி மேன்னிங் கடந்த மே 2010ல் கைது செய்யப்பட்டார். அமெரிக்க ராணுவம் மற்றும் அதன் ராஜதந்திர ஆவணங்களை வெளியிட்டமைக்காக ஜூனியன் பால் அசாஞ்சேவால் நிறுவப்பட்ட விக்கிலீக்ஸ் பிரபலமடைந்தது. அவருக்கு அடுத்தபடியாக தற்போது எட்வர்டு ஸ்னோவ்டன் தேசியப் பாதுகாப்பு ஏஜென்சியின் நடவடிக்கைகளையும், மர்மங்களையும் அம்பலப்படுத்தியவராவார். சாதாரணமாகவோ அல்லது சந்தைப்படுத்துதலுக்காகவோ திரட்டப்பட்ட தகவல்கள் பாதுகாப்பு ஏஜென்சிக்களிடம் வழுங்கப்பட்டுள்ளன என்பதையும் அவர் அம்பலப்படுத்தினார். தற்போது பாதுகாப்பு ஏஜென்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதால், இந்த ஆவணங்கள் பார்ப்பதற்கு பிரயோஜனமற்றவையாகவோ அல்லது தீங்கிழைக்காத தகவலாகவோ இருந்தாலும்கூட அதை எதற்கும் பயன்படுத்தலாம். ஆக தனி நபர் சுதந்திரம் முற்றிலும் மீறப்படுகிறது.

இயற்கையாகவே, அவர்களை கைது செய்வதற்காக ஏகாதிபத்தியங்கள் முயல்கின்றன. மேன்னிங் மீது தேசதுரோகம் இன்னும் இது போன்ற குற்றச்சாட்டின்பேரில் அமெரிக்காவில் விசாரணை நடைபெற்று வருகிறது. ஜூன் 19, 2012 முதல் லண்டனில் உள்ள ஈக்வெடார் நாட்டுத் தூதரகத்தில் அசாஞ்சே தஞ்சமடைந்துள்ளார். எட்வர்டு ஸ்னொவ்டனின் பாஸ்போர்ட்டை அமெரிக்கா முடக்கிவிட்டது, அதோடு அவருக்கு புகலிடம் தரக்கூடாதென மற்ற நாடுகளையும் மிரட்டுகிறது. அவர் தற்போது ரஷ்யாவில் தற்காலிகமாக ஒருவருடத்திற்கு தஞ்சமடைந்துள்ளார்.

அமெரிக்க ஆட்சியாளர்கள், அந்த அரசின் தலைமையான அமெரிக்க அதிபரும்கூட தம் மீதான குற்றச்சாட்டுகளை முற்றிலும் மறுக்க முயற்சித்தனர். ஆனால் உலகம் முழுவதும் எழுந்த கொந்தளிப்பு அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் படிச் செய்தது. பல்வேறு தம் தீவிரவாதத் தாக்குதல்களை முன்கூட்டியே தடுப்பதற்காகத்தான் இந்த கண்காணிப்பு என்று வாதாட அவர்கள் முயற்சித்தனர். ஆனால் ஜெர்மன் சான்சலர் மற்றும் பிரேசில் அதிபரை வேவு பார்த்த விசயத்தின்மூலம் தீவிரவாதத்திற்கு எதிரான போர் என்ற மாபெரும் பொய் தவிடுபொடியானது. "இறுதியில், எங்களுக்கும் மற்ற நாடுகளுக்குமிடையில் பகிர்ந்துகொள்ளப்படாத தகவல்களே இல்லை' என்ற அளவிற்கு நாங்கள் மிகவும் நெருக்கமாகச் செயல்படுகிறோம் என்பதை தாங்கள் அறிவீர்கள்" என்று சாமார்த்தியமாகக் கூறுவதன் மூலம் அமெரிக்க அதிபர் தனது முகத்தைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சிக்கிறார். ஆனால் நீண்ட காலமாகவே நடைபெற்றுவரும் இத்தகைய உளவுபார்த்தலைச் செய்துவரும் ஏகாதிபத்திய முகாமைச் சேர்ந்த தலைவர்களோ அமெரிக்க அதிபரோ கண்டுகொள்ளாமல், அனைத்து நாடுகளும், கடுமையான எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் கூட ஒருவருக்கொருவர் உளவுத் தகவல்களைப் பரிமாறிக்கொள்கின்றனர் என்றும் தங்களது நலன்களுக்கு எதிராக இருப்பதாக தாங்கள் கருதும் எந்தவொரு நாட்டையும் தாங்கள் வேவு பார்ப்பது தொடரும் என்றும் திமிரோடும் அலட்சியத்தோடும் கூறுகின்றனர். ஆக இப்படிப்பட்ட கேவலமான நடவடிக்கை குறித்து ஏகாதிபத்தியங்களோ அதன் தலைவர்களோ எந்த வருத்தமும் காட்டவில்லை, அவர்களிடம் நாம் அதை எதிர்பார்க்கவும் முடியாது. சொல்லப்போனால், அமெரிக்க ஆட்சியாளர்கள் கிட்டத்தட்ட உலகம் அனைத்தையும், சரியாகச் சொன்னால் 150 நாடுகளுக்கு மேலாக தனது தேசியப் பாதுகாப்பு ஏஜென்சியின் மூலமாக கண்காணிப்பு வட்டத்திற்குள் தொடர்ச்சியாக வைத்துள்ளனர். அந்த நாடுகளின் மக்கள் மற்றும் தலைவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்வதற்காக மக்கள் வரிப்பணத்திலிருந்து லட்சக்கணக்கான டாலர்களைச் செலவிடுகின்றனர். தேசிய உளவு ஏஜென்சி என்ற பெயருடைய மற்றொரு அமெரிக்க தலைமை உளவு ஏஜென்சி உள்ளது, அது தேசிய பாதுகாப்பு ஏஜென்சியின் இடத்திலிருந்துகொண்டே இயங்கக் கூடிய 13 சைபர் குழுக்களை அமைத்துள்ளதாகவும், அதற்கு வருடத்திற்கு 199 மில்லியன் டாலர்கள் செலவிடுவதாகவும் ஒப்புக்கொண்டுள்ளது. இவற்றையெல்லாம் ரகசியங்களை வெளியிடுவோர் கசியவிடவில்லை, மாறாக ஏகாதிபத்தியங்களின் நேரடி ஆதரவிலும் கவனிப்பிலும் இயங்கக்கூடிய கார்டியன், வாஷிங்டன் போஸ்ட் போன்ற பத்திரிக்கைகளே கூறியுள்ளன.

ஆனாலும், கவனிக்க வேண்டிய விசயம் என்னவெனில்; மேன்னிங் – அஸாஞ்சே – ஸ்னோவ்டன் ஆகியோர் அம்பலப்படுத்தியுள்ளவை சில உறுதிப்படுத்தமுடியாத, முக்கியமானவர்கள் அல்லாத தனி நபர்களின் முயற்சியா? உளவுபார்க்கும் நீண்ட–நெடிய வரலாற்றில் இவற்றிற்கு ஏதேனும் சிறப்பு முக்கியத்துவம் உள்ளதா? ஆட்சியாளர்கள் அல்லது குற்றத்தைச் செய்தவர்களின் பதில் நடவடிக்கையில் ஏதேனும் பொருள் பொதிந்துள்ளதா? செய்திகளை வெறுமனே தெரிந்துகொள்வதைக் காட்டிலும் இவை மற்றும் இதுபோன்ற பல கேள்விகள்தான் மக்களுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும். அவர்களது தனிநபர் சுதந்திரம் ஆபத்தில் உள்ளது.

சில காலங்களுக்கு முன்பு கூட நிலைமை இவ்வாறு இல்லை. அது நிலப்பிரபுத்துவம் – ஆன்மீகவாதம் – சாசுவதவாதம் போன்றவற்றிற்கு எதிராக, மன்னர்கள் – மதகுருமார்கள் – மத நூல்களின் அசைக்க முடியாத அதிகாரம் போன்றவற்றிற்கு எதிராக பூர்ஷ்வாக்கள் சமரசமற்ற வழியில் போராடிய காலமது. அரசரின் ஆட்சி அதிகாரத்தின் பிடியில் இருந்தும், மத நூல்கள் மற்றும் சர்வாதிகாரிகளின் பிடியிலிருந்தும் தனிநபர்களை விடுவிக்க வேண்டிய பணியை அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர். எனவே சிந்திப்பதிலும், வெளிப்படுத்துவதிலும் தனி

தொடர்ச்சி 6ம் பக்கம்

## விலைவாசி உயர்வு மற்றும் பெண்கள் மீதான கொடுமைகளுக்கு எதிராக ராஞ்சியில் நடைபெற்ற பேரணி




விலைவாசி உயர்வு, பெண்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் பிற எரியும் மக்கள் பிரச்சினைகளை எதிர்த்து ஜார்க்கண்ட் மாநில செயலாளர் தோழர் ரபின் சமாஜ்பதி மற்றும் எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) பாராளுமன்ற உறுப்பினர் தோழர் தருண் மண்டல் தலைமையில் ஜார்க்கண்ட் தலைநகர் ராஞ்சியில் நவம்பர் 18, 2013ல் நடைபெற்ற பிரம்மாண்ட பேரணி

# முதலாளித்துவம் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மனித இனத்தை நாசமாக்குகிறது

5ம் பக்கம் தொடர்ச்சி

நபர் சுதந்திரத்திற்காக நின்றனர்; சமுதாயத்தில் தனது வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் நிர்ணயித்துக்கொள்ளும் தனிநபர்களுக்கான தடையில்லா உரிமைக்காக நின்றனர். ஆண் – பெண் சம உரிமைக்காக நின்றனர். முதலாளித்துவம் செழித்து வளர்ந்த காலத்தில், பூர்ஷ்வா ஜனநாயகத்தின் வசந்த காலத்தில் அதிகாரத்திலும்கூட சுதந்திரமான போட்டி சூழலுக்காக ஆட்சியாளர்கள் வாதாடினர். அவர்கள் உண்மையைச் சார்ந்திருந்தனர்; மக்களை நம்பினர் அதோடு யாரையும் உளவு பார்க்க வேண்டிய அவசியம் உருவாகவில்லை. நிலப்பிரபுக்கள், இளவரசர்கள் மற்றும் அரசர்களின் கொடூரமான அடக்குமுறையான உக்கிரமான ஆதிக்கத்திற்கு எதிராக தாராளவாதம், ஜனநாயகம், விடுதலை மற்றும் சுதந்திரத்தின் பாதுகாவலர்களாக பூர்ஷ்வாக்கள் விளங்கினர். இத்தகைய தத்துவார்த்த அணுகுமுறையோடு மக்களை சமுதாயத்தின் சொத்துக்களாக பார்த்தனர், நிலப்பிரபுத்துவத்திற்கும் அரசர்களுக்கும் எதிரான தங்களது போராட்டத்தில் நம்பத்தகுந்த கூட்டணிச் சொத்தாக மக்களை அவர்கள் பார்த்தனர்.

ஆனால் இது நீண்ட காலம் நீடிக்கவில்லை. மிகப்பரந்த மிகவும் சுதந்திரமான பூர்ஷ்வா சமுதாயம் கூட மூலதனம் கூலி உழைப்பை ஆளக்கூடிய விதியில் செயல்பட்டு வந்தது. மிகுந்த ஜனநாயகப் பூர்வ முதலாளித்துவ அரசானது, இறுதியாக, உழைக்கும் வர்க்கம் உள்ளிட்ட லட்சக்கணக்கான பெருவாரியான மக்களை வெகு சில எஜமானர்கள், முதலாளிகள் வர்க்கச் சுரண்டலை நடத்துவதற்கான அடக்குமுறை இயந்திரமாகவே இருந்தது. எனவே அதன் சுதந்திரமான போட்டி கட்டத்திலிருந்து, அதாவது ஒப்பீட்டளவில் சரியான போட்டிக் கட்டத்திலிருந்து உண்மையிலேயே சரியற்ற போட்டிக் கட்டத்திற்கு முதலாளித்துவம் சென்றது. சிலரிலும் சிலரான ஏகபோகங்களின் கைகளில் மூலதனம் குவியத்தொடங்கி உழைக்கும் மக்களின் ஊதியம் குறையத்தொடங்கி கிட்டத்தட்ட இல்லாமல் போனது, இது அவர்களது வாங்கும் சக்தியை தொடர்ந்து சுருக்கியது, பாரபட்சம், தரித்திரம் மற்றும் ஏகபோகங்கள் உருவாதல் போன்றவை சமுதாயத்திற்குள் பெருகத் தொடங்கியது. இது அதிகம் நடைபெற நடைபெற, ஆட்சியாளர்கள் தங்களது சொந்தப் படைப்புகளான நியாயமான போட்டித் தொழில், ஜனநாயக மதிப்புகள், சுதந்திரவாதம் போன்றவற்றை மேலும் மேலும் நசுக்கத் தொடங்கினர். சுதந்திரமான போட்டி என்பது சந்தையைக் கைப்பற்றுவதற்கான உக்கிரமான சண்டையாக மாறியது, உழைக்கும் மக்களின் வாங்கும் சக்தி குறையக் குறைய சந்தையும் சுருங்கியது. அவரவர் சொந்த நாடுகளில் உள்நாட்டு சந்தை நெருக்கடியைச் சமாளிப்பதற்காக ஏகபோகங்கள் வெளிச் சந்தையை நாடினர். முதலாளித்துவம் அதன் உச்ச நிலையை, அழுகல் நிலையான, ஏகாதிபத்திய நிலைக்குள் சென்றது. மற்ற நாடுகளின் சந்தைக்குள் ஏகபோகங்கள் ஊடுருவி பெருவாரியான லாபமீட்டுவதற்காக அங்குள்ள மலிவான உழைக்கும் சக்தியை, மூலப்பொருட்களை, இயற்கை வளங்களைச் சுரண்டினர். இதன்மூலம் அவர்கள் தங்களை செழுமைப் படுத்திக் கொண்டதோடு மற்றவர்களை அடக்கி ஆள்வதற்காக அதிகாரத்தைத் தங்களிடம் ஸ்திரப் படுத்திக்கொண்டனர். சுதந்திரத்தின் நாயகர்கள் மற்ற நாடுகளை ஆக்கிரமிக்கும் கொடுங்கோலர்களாயினர், அதற்காக வளங்களை அழிப்பதற்கோ உயிர்களைக் கொல்வதற்கோ கொஞ்சமும் கவலைப் படவில்லை, அவர்களே ஒருகாலத்தில் உருவாக்கிய நியதிகளையும் மதிப்புகளையும் உரிமைகள் அனைத்தையும் உதறித் தள்ளுவதற்கும் கூட கவலைப்படவில்லை. அதே நேரத்தில் ஏகாதிபத்தியவாதிகள் தங்களது அதிகாரத்தைக் குவிக்க குவிக்க மேலும் மேலும் லாபமீட்ட உச்சபட்ச லாபமீட்ட பேராசை கொண்டனர், மேலும் மேலும் வெளிச்சந்தைகளைக் கைப்பற்றுவதற்கு மற்றவர்களோடு மோதத் தொடங்கினர். இந்த சந்தை–கைப்பற்றும் சாகசம் அமைதியாக இருக்கவில்லை. மாறாக ஏகாதிபத்தியம் உருவான நாள் முதல், சந்தைக்கான வேட்டை என்பது உச்சபட்ச லாபமீட்டுவதற்கான வேட்டையோடு தொடர்பு கொண்டிருப்பதால், அதற்காக அது தனக்கு அச்சுறுத்தலாக உருவெடுக்கக்கூடிய எந்தவொரு நாட்டோடும் (ஏகாதிபத்திய நாடாக இருந்தாலும் கூட) மற்றொரு ஏகாதிபத்திய நாடு சண்டையிடுவதற்கும் ஏன் அழிப்பதற்கும் கூட இட்டுச்சென்றது. இதனால்தான் ஏகாதிபத்தியம் தவிர்க்க இயலாதபடி போரை உருவாக்குகிறது என்று கருதப்பட்டது. எனவே தான் இரண்டு பேரழிவு உலகப்போர்களும், அதனைத் தொடர்ந்து ஏராளமான பிராந்தியப் போர்களும் ஏகாதிபத்தியங்களால் நடத்தப்பட்டன. அது நாஜிக்களின் ஜெர்மனியோ, அல்லது பிரிட்டனோ அல்லது பிரான்சோ, அல்லது ஜனநாயக அமெரிக்காவோ என எந்த ஏகாதிபத்தியத்தால் நடத்தப்பட்டாலும் அவற்றில் லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர், பெருவாரியான இயற்கை எழில் வளங்களும் சொத்துக்களும் நாகரீகமும் அழிக்கப்பட்டன.

நெருக்கடி அதிகரிக்க, அதிகாரம் ஓரிடத்தில் குவிவதும், போர்களும் அதிகரிக்கின்றன, இவற்றோடு உளவுபார்த்தலும் அதிகமாகிறது. எனவேதான் இரண்டாம் உலகப்போரில் நாஜிக்களின் ஜெர்மனியில் ஜெஸ்டபோஸ் என்றழைக்கப்படக் கூடிய ரகசியப் போலீஸ் இருந்தனர், அதோடு உலகப்போர்களுக்குப் பின்னர் அமெரிக்காவின் சி.ஐ.ஏ. மற்ற நாடுகளின் அரசியல் ஏன் அரசாங்க இயந்திரத்திற்குள்ளும் கூட ஊடுருவி அவற்றை தகர்த்தன. ஐந்தாம் படைகளின் உதவியுடன் ஜெஸ்டோபஸ் மற்ற நாடுகளை நாஜிக்களின் தாக்குதலுக்கு ஆளாகக்கூடியதாக்கியது. அதே வேளையில் தங்கள் முன் மண்டியிட மறுக்கும், அல்லது உலகில் நவீன காலனியாதிக்கத்தை நிலைநாட்டும் அமெரிக்காவின் சண்டித்தனத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நாடுகள் அல்லது தலைவர்களுக்கு எதிராக உலகம் முழுவதிலும் சி.ஐ.ஏ. சதி வலைகளைப் பின்னியது. அத்தகைய தனிநபர்களை அதிகாரத்திலிருந்து நீக்கினர், தேவைப்பட்டால் விரட்டியடித்தனர் அல்லது கொலை செய்தனர். இதற்கு உலகில் ஏராளமான உதாரணங்கள் உள்ளன. இப்படி பல்வேறு நாடுகள் செய்யும் உளவு, எதிர் உளவுகளால் உலக சூழ்நிலைமை தான் கெட்டு விட்டது.

எனவே வேவு பார்த்தல் என்பது முதலாளித்துவ – ஏகாதிபத்திய உலகில் புதிதான ஒன்றல்ல. ஜனநாயகத்தின் அனைத்து முகத்திரைகளையும் போர்த்திக்கொண்டு, இந்த அமைப்பு தங்களின் அரசாங்கம் குறிப்பாக போர்களின் பங்கும் பகுதியுமாக இந்த நாசகார செயல்களில் ஈடுபடுகிறது. ஆனால் ஆண்டுகள் செல்லச் செல்ல, அழுகிப் போன முதலாளித்துவத்தின் நெருக்கடி மேலும் தீவிரமாகியது, இது சமூகம் – அரசியல் – கலாச்சாரம் சீரழிவு என எல்லாம் தழுவிய நெருக்கடியானது, உளவு பார்ப்பதும் அதிகரித்தது, நாசகரமானது, அபாயகரமானது. இந்த நிகழ்வுதான் தற்போது மிகவும் தெளிவாகியுள்ளது, சைபர் வெளி உள்ளிட்ட தொழில்நுட்ப வளர்ச்சியை தங்களது நாசகார திட்டங்களுக்கு வடிவம் கொடுப்பதற்கான கடைசி ஆயுதமாகவும் வலுவான ஆயுதமாகவும் பயன்படுத்திக் கொண்டுள்ள ஏகாதிபத்தியவாதிகள் உளவு பார்ப்பதற்கு புதிய புதிய யுக்திகளை வளர்த்துவருகின்றனர். முதலாளித்துவ சமுதாயங்களில் மதிப்பு மாண்புகள் சீரழிந்து சிதைந்துவிட்டதால் நம்பிக்கை, நாணயம், சகோதரத்துவம் போன்ற மனித குணங்கள் ஏதுமில்லாதவர்களாக ஆட்சியாளர்கள் ஆகிவிட்டனர். நெருக்கடியிலிருந்து விடுபடும் பொருட்டு சந்தையில் தங்களது வல்லாதிக்கத்தை நிலைநாட்டுவதை உறுதிசெய்துகொள்வதற்காக மட்டுமே தங்களது அனைத்து உறவுகளையும் வைத்துக்கொள்கின்றனர். எனவேதான் அவர்களது கூட்டாளிகள் என்று அழைக்கப்படுபவர்களைக்கூட வேவு பார்க்கின்றனர். பிரிட்டிஷ்– ஜெர்மன் – பிரான்ஸ் மற்றும் இன்னபிற ஏகாதிபத்தியங்களை சேர்த்துக்கொண்டு மென்மையான மற்றும் பலகீனமான நாடுகள் மீது தாக்குதல் தொடுத்து வேட்டையாடுவதில் வல்லாதிக்கத் தலைவனாக அமெரிக்க ஏகாதிபத்தியம் உருவானதோடு மட்டுமன்றி, தங்களுக்குள்ளேயே தங்களது கூட்டாளிகள் என்ன செய்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ளும் வழிமுறைகளையும் அமெரிக்க ஏகாதிபத்தியம் விட்டுவைக்கவில்லை. இதனால் தான் ஜெர்மன் பிரதமர் போன்ற உலகத் தலைவர்களின் தொலைபேசி ஒட்டுக் கேட்பு நடைபெறுகிறது.

அதே நேரத்தில், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான ஏகாதிபத்தியங்கள், தத்தமது நாடுகள் மற்றும் இதர நாடுகளின் மக்கள் மீது தாங்கள் நடத்தி வரும் ஈவிரக்கமற்ற சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறையானது மக்களிடையே கடுமையான கோபத்தையும் அதிருப்தியையும் எதிர்ப்புணர்வையும் உருவாக்கிவிட்டதை நன்கறிவர். இது ஏகாதிபத்தியத்தின் காலகட்டம் மட்டுமல்ல என்பதையும் ஏகாதிபத்தியம் உருவான நாள் முதலே ஆட்சியாளர்கள் அறிவர். அதே வேளையில் இது மூலதன ஆட்சிக்கு எதிரான, மார்க்சிசம் – லெனினிசம் என்ற வெல்லற்கரிய சித்தாந்தத்தின் வலிமையோடு நடைபெறும், தொழிலாளர் வர்க்க

தொடர்ச்சி 7ம் பக்கம்

## விலைவாசி உயர்வு, விவசாயிகளிடமிருந்து நிலத்தை பறித்தல், எரியும் மக்கள் பிரச்சினைகளுக்கு எதிராக பேரணி






1. விலைவாசி உயர்வு உள்ளிட்ட மக்கள் பிரச்சினைகளை கண்டித்து பீகார் தலைநகரம் பாட்னாவில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) செப்டம்பர் 30, 2013ல் நடத்திய ஆர்ப்பாட்டம். பீகார் மாநில செயலாளர் தோழர் சிவசங்கர், தோழர் அருண்குமார் சிங் பேரணியில் உரையாற்றினர். 5 நபர் கொண்ட குழு முதலமைச்சரிடம் மனு சமர்பித்தது

2. விலைவாசி உயர்வு, விவசாயிகளிடமிருந்து வலுக்கட்டாயமாக நிலத்தை பறித்தல் உள்ளிட்ட எரியும் மக்கள் பிரச்சினைகளுக்கு எதிராக ஹரியானா மாநிலம் ரோடக்கில் அக்டோபர் 8, 2013 அன்று 5 ஆயிரம் மக்கள் அணிதிரண்ட பேரணி. எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)யின் மத்தியக் கமிட்டி உறுப்பினரும் ஹரியானா மாநில செயலாளருமான தோழர் சத்தியவான் இப்பேரணியில் உரையாற்றினார். ஹரியானா முதலமைச்சருக்கும் பிரதம மந்திரிக்கும் துணை கமிஷனர் மூலமாக மனு சமர்பிக்கப்பட்டது.

# தோழர் பிரதிபாகுமாரி . . .

4ம் பக்கம் தொடர்ச்சி

இலக்கைக் கொண்டு மேலும் வளர்ந்து முன்னேறுகிறது. எனவே இறுதி இலக்கு வரைக்கும் நாம் ஒன்றாக பயணிக்கமுடியும். இதுதான் உறவு குறித்த கம்யூனிஸ கோட்பாடாகும்.

இந்த உறவுமுறையின் உயர்ந்த வடிவத்தை மார்க்ஸ் ஏங்கெல்ஸ் இடையே இருந்த உறவில் நாம் காண்கிறோம். ஏங்கெல்ஸ் போன்றோர் இல்லையெனில் மார்க்ஸ் பட்டினியால் செத்திருப்பார். ஒரு பணக்கார குடும்பத்திலிருந்து வந்தபோதிலும், மார்க்ஸையும் அவர் குடும்பத்தையும் காப்பாற்றவே ஏங்கெல்ஸ் ஒரு வேலையைத் தேடிக்கொண்டார். மார்க்ஸின் அனைத்துப் படைப்புகளையும் தனது நெஞ்சில்வைத்துப் போற்றி ஏங்கெல்ஸ் பாதுகாத்தார். மார்க்ஸின் மறைவிற்குப் பிறகு ஏங்கெல்ஸ் அவரது எழுத்துக்களை எடிட் செய்து மேம்படுத்தி பிரசுரித்தார். ஏங்கெல்ஸ் இல்லாமல் மார்க்ஸை நாம் நினைத்துப் பார்க்கமுடியாது.

இதுதான் கம்யூனிஸ்டுகளின் உறவுமுறையாகும். இன்றைய பூர்ஷுவா சமுதாயத்தின் பரஸ்பர நேசத்தை, உறவுமுறையை விட கம்யூனிஸ உறவில் தனிச்சொத்து மனப்பான்மையிலிருந்து விடுபட்ட தன்னலமற்ற அன்பின் வடிவத்தை அன்பின் பாசத்தின் உச்சியை நாம் உணர்கிறோம். இது மிகவும் உன்னதமான வாழ்க்கைக் கோட்பாடாகும். நடத்தை, பழக்க வழக்கம் மற்றும் நடைமுறையின் பழைய கோட்பாடிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். இதுவே உலகெங்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளின், பல்வேறு நாட்டின் புரட்சியாளர்களின் போராட்டமாகும்.

நாம் பல்வேறு நாடுகளில் சோசலிசத்தை நிறுவும்போது, வர்க்கங்கள் மறைவதற்கான சூழ்நிலையை சோசலிசம் உருவாக்கும்போது அன்று கம்யூனிஸம் தோன்றும். அப்பொழுது புரட்சிகர வாழ்க்கை மிகவும் சகஜமானதாக இயல்பானதாக இயற்கையானதாக இருக்கும். இதுவே நமது போராட்டமாகும், மிக உன்னதமான போராட்டமாகும்.

பிரதிபாகுமாரியின் மரணம் தோழர்களிடம் மிகுந்த மனவலியை உருவாக்கியுள்ளது. இந்த வலியிலிருந்து தோழர்கள் ஆழமானதொரு விசயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். நமது கட்சியின் ஆசானும் ஸ்தாபகப் பொதுச் செயலாளருமான தோழர் சிப்தாஸ் கோஷ் திடீரென அகால மரணம் அடைந்தபோதும் அது கட்சி முழுவதும் நினைக்கமுடியாத அளவு மிகுந்த மன வலியை உருவாக்கியது. பல மாதங்களுக்கு என்னால் கண்ணீரை நிறுத்தமுடியவில்லை. இன்றுகூட அவரது வாழ்க்கைப் போராட்டத்தை எண்ணிப் பார்க்கும்போது எனக்கு கண்ணீர் சுரக்கிறது. எனக்கு அந்த வலி, ஆழ்மனதில் தோன்றும் அந்த ஆழமான வலி என்ன என்று தெரியும். அது எவ்வளவு ஆழமானது என விவரிக்க முடியாது. உண்மையில் இதயத்தின் அவ்வலியை உடல்ரீதியாகவே உணர்ந்தேன். ஆனால் அவ்வலி என்னை ஆதரவற்றவனாக ஆக்கவில்லை. அவ்வலி என்னை கட்சிக்கும் புரட்சிக்கும் அதிகமாக ஈடுபடுத்திக் கொள்ள எழுச்சியுறச் செய்தது. வலிகூட ஒருவரை எழுச்சிபெறச் செய்யும் என்பதை அன்று நான் உணர்ந்தேன். அவரிடமிருந்து, எனது ஆசிரியரிடமிருந்து, நான் என்ன கற்றேனோ அவற்றை மக்களிடம் எடுத்துச் செல்லும் தேவையை அதிகமாக அன்று உணர்ந்தேன். அவரது சிந்தனைகளை ஒவ்வொரு நொடியும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதை நான் உணர்ந்தேன். மனவலி ஒருவரை அழவைத்தாலும், அதேசமயம் அவரை எழுச்சியுறச் செய்யும் என்பதை நான் அன்று கற்றுக் கொண்டேன். ஆனால் அந்த வலியை தன்னலமற்று எடுத்துக்கொள்ளும் போதுதான் அவ்வாறு எழுச்சி பெறமுடியும். அன்பானது தனிப்பட்ட வடிவில், வலியானது தனிப்பட்ட முறையில் இருக்கும்போது ஆதரவற்ற உணர்வு தோன்றுகிறது. தன்னலத்திற்கு அப்பாற்பட்ட மனவலி மனிதனை ஆதரவற்றவராக ஆக்குவதில்லை. மாறாக அது அவரை எழுச்சியுறச் செய்கிறது.

பிரதிபாகுமாரி மரணம் எல்லா தோழர்களையும் அழவைத்தது. ஆனால் எந்த தோழரும் ஆதரவற்றவராக தன்னை உணரவில்லை என்பதை நான் பார்க்கிறேன். மாறாக போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல, புரட்சிக்காக தன்னை மேலும் அர்ப்பணித்துக் கொள்ள அவர்கள் மேலும் உறுதியெடுத்துக் கொள்கின்றனர். தனது மரணத்தால் அவர் பல ஆதரவாளர்களை அனுதாபிகளை கட்சிக்கு நெருக்கமாக கொண்டுவந்து விட்டார்.

இது வெறும் மரணமல்ல; புரட்சியாளரின் மரணமும் புரட்சிக்கு ஆதரவான சூழலை உருவாக்குகின்றது. இத்தருணத்தில் கட்சியை ஆழமாக புரிந்து கொள்ளவேண்டும் என்று தோழர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். அவர் விட்டுச் சென்ற போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டுமென்றும் புரட்சிக்காக தங்களை மேலும் அர்ப்பணித்துக் கொள்ளவேண்டுமென்றும் தோழர் சிப்தாஸ் கோஷ் காட்டிய புரட்சிப்பாதையில் மேலும் முன்னேறி செல்லவேண்டுமென்றும் நான் தோழர்களைக் கேட்டுக் கொண்டு தோழர் பிரதிபாகுமாரிக்கு எனது புரட்சிகர மரியாதையையும் புரட்சிகர அஞ்சலியையும் செலுத்தி என் உரையை முடிக்கிறேன்.

தோழர் பிரதிபாகுமாரிக்கு செவ்வணக்கம்! பாட்டாளிவர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களுக்கு செவ்வணக்கம்!

# அமெரிக்கா உளவு . . .

6ம் பக்கம் தொடர்ச்சி

இயக்கத்திற்கான காலமுமாகும், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் காலகட்டமும் ஆகும் என்பதையும் நன்கறிவர். இச்செயல்முறைப் போக்கில் என்ன நடந்தாலும் இறுதியில் ஒடுக்கப்படும் மற்றும் சுரண்டப்படும் உழைக்கும் மக்களின் கைகளில்தான் இறுதிவெற்றி கிட்டும் என்ற வரலாற்றுப்பூர்வமான தவிர்க்க இயலாத ஒன்றை உணர்கையில் ஏகாதிபத்தியங்கள் மரண பீதி அடைகின்றனர். சந்தேகமே இல்லை, நவீன திருத்தல்வாதம்தான் சோசலிச முகாமின் வீழ்ச்சிக்கும் வெற்றி நடையைத் தாமதப்படுத்துவதற்கும் காரணமாயிருந்தது; ஆனால் திருத்தல்வாதத்தின் எதிரி வெளியிலிருந்து வரவில்லை உள்ளேயேதான் இருக்கிறது என்பதை சர்வதேச கம்யூனிச இயக்கம் புத்தாக்க சக்தியோடு கண்டறிய வேண்டும். எனவே திருத்தல்வாதத்தை போராடி ஒழித்து ஏகாதிபத்தியத்திற்கு எதிரான தமது போராட்டத்தை பலப்படுத்தி' கொள்ள வேண்டும்.

தற்போது, உலகம் முழுவதிலுமுள்ள ஏகாதிபத்தியங்களும் முதலாளித்துவவாதிகளும் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளையும் மீறி, **99%** மக்களை **1%** பேர் எப்படி ஆளலாம் என்ற எதிர்ப்புக் குரல் எழுப்பி பல்வேறு இடங்களில் பொதுமக்கள் வீதிகளில் இறங்கியுள்ளனர். இந்நிலையின் தாக்கத்தை போர்–வெறிபிடித்த அமெரிக்க ஏகாதிபத்தியங்களும்கூட, தாங்கள் ஊடுருவியுள்ள நாடுகளில் மட்டுமல்லாது தங்களது சொந்த நாட்டிலும்கூட கண்டுணர்ந்து வருகின்றனர். மரணபீதியில் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ள ஆட்சியாளர்கள் ஆதலால் வெறிபிடித்து, இரக்கமின்றி குரூரமாக உள்ளனர். முதலாளித்துவவாதிகளும், ஏகபோகங்களும், தங்களது மக்களுக்கு நம்பிக்கை அளிக்க முடியவில்லை. எனவே மக்களை சமுதாயத்தின் சொத்துக்களாகக் கருதிய பூர்ஷ்வாக்களின் மூதாதையர்கள் எண்ணத்திற்கு நேர் எதிராக, இன்றைய ஏகாதிபத்தியங்களும், ஆட்சியாளர்களும் இன்று எந்தவொரு சாமானிய மனிதனும் கேள்விகேட்டுவிட்டால், தலை நிமிர்ந்து விட்டால் அதை மிக ஆபத்தான எதிரியாகப் பார்க்கின்றனர். எனவேதான் அவர்கள் தங்களது உளவு பார்க்கும் உயர்–தொழில்நுட்ப நாசகார வலையை சமுதாயம் முழுமைக்கும் பரப்பியுள்ளனர், யாரையும் அலசலிலிருந்து தப்பிக்க இயலாதபடி உலகின் மூலை முடுக்கெங்கும் எல்லா நபர்களையும் கண்காணிக்கும் வண்ணம் பரப்பிவைத்துள்ளனர். எனவே இது ஏதோ ஒரு ஏகாதிபத்திய நாடா, அல்லது அரசின் தலைமையா, அது எவ்வளவுதான் சக்தி வாய்ந்தது என்பதல்ல கேள்வி. எந்த ஒரு ஆணும் பெண்ணும் தங்களது பிடியை விட்டு தப்பி விடாதபடி, இருக்கக்கூடிய அமைப்பை ஏற்றுக் கொள்ளாதவராக மாறிவிடாதபடி, இறுதியில் முதலாளித்துவம்–ஏகாதிபத்தியத்திற்கு எதிரான புரட்சிகரப் போராட்டத்தில் பங்கெடுத்துவிடக் கூடாது என்பதற்காக ஒட்டுமொத்த முதலாளித்துவ – ஏகாதிபத்திய அமைப்புமே இப்படிப்பட்ட தனிநபர் உளவு பார்க்கும் மனிதகுல விரோத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. ஏகாதிபத்தியங்களின் தலைவனும் மனிதகுலத்தால் மிகவும் வெறுக்கப்படும் மனிதகுல விரோதியுமான அமெரிக்க ஏகாதிபத்தியம் இயற்கையாகவே ஏராளமான எதிரிகளை ஈன்றெடுத்துள்ளது. எனவேதான் அவர்கள் தங்களை மிகக்கொடிய கொலை பாதக ஆயுதம் தரித்தவர்களாக ஆக்கிக்கொண்டனர். அமெரிக்காவின் என்.எஸ்.ஏ. மற்றும் இதர துப்பறியும் நிறுவனங்கள் போன்றவை எல்லாம் மக்களுக்கு எதிரான இந்த அபாயகரமான நய வஞ்சக நடவடிக்கையின் கருவிகளாகச் செயல்படுகின்றன. ஆனால், மேலே குறிப்பிட்டபடி, என்.எஸ்.ஏ.விடம் உள்ள உளவு வலை போன்ற ஒன்றை உருவாக்கும் வாய்ப்போ அல்லது ஆதரமோ கிடைத்தால் பிரிட்டிஷ் –ன் ஜி.சி.எச்.க்யூ (GCHQ) அல்லது மற்ற ஏகாதிபத்திய நாடுகளின் உளவு அமைப்புகளோ அதைத் தவறவிடப்போவதில்லை.

இந்த நிலைக்குத் தான் உலக ஏகாதிபத்திய அமைப்பு வந்துள்ளது! அது வெகு சிலருக்கு, கையளவு சிலருக்கு மட்டும் சேவை செய்வதோடு மற்ற அனைவரையும் அடிமைத் தனத்திலும் தனது தொடர் கண்காணிப்பிலும் வைத்திருக்க முயற்சிக்கிறது. விடுதலை, சுதந்திரம், ஜனநாயகம், தாராளவாதம் பற்றி அவர்கள் என்னதான் பறைசாற்றிக் கொண்டிருந்தாலும் அவை எல்லாவற்றையும் காற்றில் பறக்கப்பட்டுவிட்டன. முதலாளித்துவத்திற்கு சேவை செய் அல்லது செத்துமடி, இதுதான் அவர்கள் மக்களிடம் இருந்து விரும்பும் ஒரே மந்திரம்!

ஒரு அமெரிக்கப் பிரஜை தனது சமூக வலைத் தளத்தில் பதித்திருப்பது போல "பொதுமக்கள் தங்களுக்கென சொந்த தீர்மானத்தை வைத்திருக்க வேண்டும்... தாங்கள் செய்யும் அனைத்தையும் மறைப்பதற்காக அரசாங்கம் பல ஆண்டுகாலமாக மக்களை மதிப்பிழக்கச் செய்து வருகிறது. ... அதில் ஒன்றையாவது ஸ்நோவ்டன் நிரூபித்து விட்டார் என்று நான் நினைக்கிறேன். அதாவது, அரசாங்கம் செய்யும் அனைத்தும் நமக்குத் தெரிவதில்லை. அரசாங்கம் எப்போதுமே சரியானதைச் செய்வதில்லை எனவும் எனவே அமைப்பை நிந்தித்து பிரச்சனைகளை உருவாக்குவதற்கு வெகுசிலரே போதுமானது."

அமெரிக்காவிற்குள்ளும் வெளியேயும் எழும் குரல் இதுவாக இருக்கட்டும்; ''அரசாங்கம் செய்யும் ஒவ்வொன்றுமே அதன் எஜமானன், ஆளும் பூர்ஷ்வாக்களின், ஆளும் ஏகபோகங்களின் சமிக்ஞையின் படியே நடக்கிறது! அவர்கள் வாழ்க்கைச் சங்கிலியல் பின்னப்பட்டுள்ள தங்களது அடிமைகள் மட்டுமே வாழும்படியாக, உலகை சுடுகாடாக்க மாற்ற விரும்புகின்றனர். ஆனால் மக்களுக்கு தமது தீர்மானம் இருக்கிறது. அது நடைபெற அவர்கள் விரும்பவில்லை. மக்களை உளவு பார்க்கும் இந்த கேவலமான விளையாட்டு ஒழியட்டும்! திட்டம் தீட்டுவோரும் அமல்படுத்துவோரும், ஏகபோகங்களும், ஒழியட்டும்! மனித குலத்தின் இந்த மிக நாசகார எதிரிகளை முறியடிக்க புனிதத் தன்மையோடும் மனிதாபிமானத்தோடும் ஒன்றுபட்டு தலைநிமிர்ந்து, துணிச்சலாக, எதற்கும் அஞ்சாமல், உறுதியாக அடியெடுத்து முன்னேறுவீர்!

# டிசம்பர் 6 . . .

2ம் பக்கம் தொடர்ச்சி

கட்டுக்கடங்காத மதவெறி பரவுவது ஏராளமான அப்பாவி உயிர்களைப் பலிவாங்குவது, பெண்களின் கண்ணியத்தை அவமதிப்பது அதோடு பெரிய அளவில் சொத்துக்களை அழிப்பதோடு நிற்பதில்லை. அதோடு வாழ்க்கையின் எரியும் பிரச்சனைகள் மீது பரந்துபட்ட சக்தி வாய்ந்த ஒன்றுபட்ட ஜனநாயக வெகுஜன இயக்கத்தைக் கட்டி எழுப்புவதற்கான முயற்சியையும் அது சிதைக்கிறது. எனவே மதவாதம்–அடிப்படைவாதத்தின் நச்சுத் தாக்கத்திலிருந்து விடுபடுவது மிகவும் கட்டாயமானதாகும். நம்புவோர் அவரவர் மத நம்பிக்கைகளை தங்களது தனிப்பட்ட வாழ்க்கையில் பின்பற்றலாம். ஆனால், சமுதாயத்தில் தனது சமூக அடையாளத்தைக் காட்டுவதற்காக தனது மத நம்பிக்கையை பயன்படுத்தக்கூடாது. ஒடுக்கப்படுவோர் மற்றும் அடக்கப்படுவோர், போராடும் உழைப்பாளி, விவசாயி, நடுத்தர வர்க்க நபர், மாணவர், இளைஞர் அல்லது பெண் என்ற பரந்துபட்ட குடும்ப உறுப்பினராக ஒருவருக்கொருவர் இணைந்து போராடும் சகோதரர்கள் என்ற ஒரே அடையாளத்தோடுதான் இருக்கவேண்டும்.

எனவேதான் வாழ்வின் எரியும் பிரச்சனைகள் பற்றிய கோரிக்கைகள் மீது வலுவான ஒன்றுபட்ட, நீடித்த, விடாப்பிடியான, வர்க்க மற்றும் வெகுஜன போராட்ட இயக்கங்களை வளர்த்தெடுக்கவேண்டியது இன்றைய அவசியமான பணி என்று பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களால் உருவாக்கப்பட்ட எஸ்.யு.சி.ஐ. (கம்யூனிஸ்ட்) உறுதியாகக் கருதுகிறது. அதோடு இந்தப் போராட்டங்கள் எல்லாம் மதவாத நஞ்சிற்கு எதிரான மாநாடுகள், கருத்தரங்கங்கள், பொது விவாதங்கள் மற்றும் பெரிய அளவிலான இலக்கியப் பிரச்சாரங்கள் மூலமாக உக்கிரமான சித்தாந்த – கலாச்சார இயக்கத்தோடு இணைக்கப்படவேண்டும். ஏதேனும் மதக் கலவரம் வெடித்தால், விழிப்புணர்வுமிக்க வெகுஜன இயக்கத்தின் ஒன்றுபட்ட வலிமையோடு அதை எதிர்த்து முறியடிக்க வேண்டும்.

Registered News Paper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 25th December 2013

புரட்சி சிந்தனை

Post. Reg. No: TN/CCN/429/2012-14
WPP Licence No.: TN/CCN/153/2012-14
Registered with the Registrar of Newspaper in India No : 62018/88

# சகாப்தம் படைத்த வியட்நாம் விடுதலைப் போராட்டத்தின் தலைவர் ஜெனரல் வோ நுகயென் கியாப் மறைந்தார்

ஜெனரல் நுகுயென்கியாப் கடந்த அக்டோபர் 4ம் நாளன்று அவரது 102ம் வயதில் இவ் உலகை விட்டு மறைந்தார். அவரது பெயரைக் கேட்டதுமே உலகமெங்கும் இருக்கின்ற புரட்சியாளர்களுக்கு வியட்நாமின் நலிவுற்றிருந்த ஏழை விவசாயக்குடி மக்கள், பெரும்பாலும் கிராமப்புற மக்கள் மிகவும் கொடிய கொலை பாதகத் தன்மை கொண்ட மிக வெறுக்கத்தக்க எதிரியான அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சியாளர்களையும் அவர்களின் இராணுவத்தையும் எதிர்த்து நடத்திய வீரம் செரிந்த யுத்தங்களைப் பற்றிய நினைவுகள் எண்ணங்களில் ஊற்றெடுக்கின்றன.



அதே நேரத்தில் தனது கொரில்லா யுத்த முறையின் மூலம் யுத்தக்களத்தில் அமெரிக்க எதிரிகளுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய ஜெனரல் கியாப் அவர்களின் போர் யுத்திகளைத் தாக்குப் பிடிக்க முடியாமல் வியட்நாமை தன் காலடியில் மண்டியிட வைக்க விளைநிலங்களை அழித்து விவசாயத்தை சீர்குலைக்க மனித உயிர்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் தீங்கு விளைவிக்கும் இரசாயன ஆயுதங்களை அமெரிக்கா பயன்படுத்தியதும் இன்று நினைவுக்கு வருகிறது

ஆயினும்கூட, தோழர் ஹோசிமின் தலைமையில் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியும், அதன் அன்பிற்குரிய ஜெனரல் கியாப் மற்றும் வியட்நாமிய மக்களும் யுத்தவெறிகொண்ட அமெரிக்க ஏகாதிபத்திய பட்டாளத்திற்கு இறுதியாக அவமானகரமான தோல்வியைக் கொடுத்தார்கள். அமெரிக்க இராணுவக் கூலிப்படையின் படைத் தலைவர்களும் இராணுவ வீரர்களும் மற்றும் இதற்குமுன் பல யுத்தங்களில் வெற்றி ஈட்டிய ஜெனரல்களும் – இராணுவப் பயிற்சிப் பள்ளியில் எந்த ஒரு முறையான பயிற்சியும் பெறாமலேயே ஒரு மனிதன் எப்படி ஒரு இராணுவத்தின் மிக உயர்ந்த தலைவராக உயர்ந்து உலகின் புகழ்மிக்க மாபெரும் இராணுவ ஜெனரல்களுக்கும் புகழ் பெற்ற யுத்தத் தளபதிகளுக்கும் இணையாக வர முடிந்தது என வியந்தார்கள். அவருடைய வீரார்ந்த தலைமையின் கீழ் அணிவகுத்து தளர்வுராத யுத்தம் நடத்திய மக்கள் பல்வேறு கடினமான கால கட்டங்களையெல்லாம் கடந்து யுத்த வரலாற்றில் வாழ்வா சாவா என்ற போராட்டத்தைத் தொடர்ச்சியாக நடத்தி ஒரு உட்சபட்ச வெற்றியை ஈட்டினார்கள். இந்த வெற்றி எப்படிச் சாத்தியமானது என்பதைப் புரட்சியாளர்கள் மிக நன்றாகவே அறிவர். மார்க்சிச லெனினிச சித்தாந்தத்தின் பலத்தின் அந்நாட்டு மக்களையும் அதன் நிலைமைகளையும் மிகப் பருண்மையாகப் புரிந்து கொண்டதன் அடிப்படையில் சரியான இராணுவ போர்தந்திரத்தையும், மக்களின் நெஞ்சத்தில் கொழுந்து விட்டெரிந்த தேசபக்த உணர்வையும் மிகச் சரியாக ஒருங்கிணைக்க முடிந்ததால் மட்டுமே இது சாத்தியமானது. வியட்நாமிய மக்களின் வீரம் செரிந்த போராட்டம் நீடூழி வாழ்க!

## புதுக்கோட்டை மாவட்டம்

# விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி பிரச்சாரப் பொதுக்கூட்டம்

விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோயில் தாலுகா, சேமங்கோட்டையில் அகில இந்திய விவசாய விவசாயத் தொழிலாளர் சங்கம் (AIKKMS) பிரச்சார பொதுக்கூட்டம்.

சமீபத்தில் தென்மாவட்டங்களில் செய்த தொடர் மழை காரணமாக விவசாயிகளும் தொழிலாளி மக்களும் மிகுந்த சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர். மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சிக்கு வருகின்ற ஒவ்வொரு அரசாங்கங்களும் தொடர்ந்து விவசாயத்தில் தனியார்மயத்தை ஊக்குவித்து அனைத்து வகையிலும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை முடக்கி வருகின்றனர். இத்தகைய விவசாயிகள் விரோத அரசாங்கங்களின் நடவடிக்கைகளை எதிர்த்து தொடர்ந்து சமரசமின்றி போராட்ட இயக்கங்களை அகில இந்திய விவசாய விவசாயத் தொழிலாளர் சங்கம் (AIKKMS) நடத்தி வருகிறது. அத்தகைய போராட்ட இயக்கங்களின் தொடர்ச்சியாக புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவில் தாலுகாவின் பல்வேறு கிராமங்களில் விவசாயிகளின் பல்வேறுபட்ட கோரிக்கைகளுக்காக பிரச்சார இயக்கங்களையும், கூட்டங்களையும் AIKKMS நடத்தி வருகின்றது. நவம்பர் 11, 2013 திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் சேமங்கோட்டையில் பிரச்சாரப் பொதுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இக்கூட்டத்திற்கு தோழர் ராக்கப்பன் அவர்கள் தலைமையேற்றார். இக்கூட்டத்திற்கு AIUTUCயின் மாநிலக் குழு உறுப்பினர் தோழர் P. பாண்டியன் அவர்கள் சிறப்புரையாற்ற வருகை தந்திருந்தார். கூட்டத்தில் துவக்கவுரை நிகழ்த்திய AIKKMSன் மாவட்டப் பொறுப்பாளர் தோழர் A. கோவிந்தராசு அவர்கள் இதற்கு முந்தைய ஆண்டில் பெய்த மழையின் காரணமாக பயிர்களை இழந்து நஷ்டமடைந்த விவசாயிகளுக்கே இன்னும் உரிய நிவாரணம் இதுவரையில் வழங்கப்படாமல் காலம் தாழ்த்தி வரும் மாநில அரசாங்கத்தின் மெத்தனப் போக்கைக் கண்டித்தார். மேலும் மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் அரசு அறிவித்த ரூ.148 குறைந்தபட்சக் கூலியும் இதுவரையில் தொழிலாளர்களுக்கு முறையாக வழங்கப்படாமல் இருந்து வருவது குறித்தும், இது குறித்து தாலுகா நிர்வாகம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டுப் பேசினார்.

இந்த பிரச்சாரக் கூட்டத்தில் சிறப்புரையாற்றிய தோழர் பாண்டியன் அவர்கள் தொடர்ந்து தமிழக அரசாங்கம் விவசாயிகளின் பிரச்சினையில் காட்டிவரும் அலட்சியப் போக்கை கண்டித்ததோடு, பாடுபட்டு விவசாயம் செய்தும் கூட அவர்களின் விவசாய விளைபொருட்களுக்கு கட்டுபடியான விலை கிடைப்பதில்லை அந்த அளவிற்கு விவசாயத்திற்கான அனைத்து இடுபொருட்களின் விலையும் தனியார், பன்னாட்டு கம்பெனிகளின் லாபபேராசைக்காக உயர்த்தப் பட்டுவிட்டது. இதனால் பாடுபட்டு உழைத்தும் விவசாயிகளுக்கு எந்தப் பயனும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டினார். இந்நிலையைச் சற்றேனும் மாற்ற மானிய விலையில் விவசாயிகளுக்கு உரம், பூச்சி மருந்து, விதை உள்ளிட்ட விவசாய இடுபொருட்கள் வழங்க அரசாங்கம் முன்வருவது அவசியம் என்று குறிப்பிட்டார். மேலும் சமீபத்தில் பெய்த பருவமழைக்குப் பின்பு டெல்டா மற்றும் கடலோர மாவட்டங்களில் கால்நடைகள் அனைத்தும் கோமாரி என்ற கொடிய நோயினால் பாதிப்பிற்குள்ளாகி, நூற்றுக்கணக்கில் கால்நடைகள், கோழி, ஆடு, பன்றி ஆகியவை இறந்து போயின. ஏற்கனவே மிகுந்த பொருளாதாரப் பின்னடைவிலும் வறட்சியிலும் வாழ்ந்து வருகின்ற இம்மாவட்ட மக்களின் கடைசி வாழ்வாதாரமே இந்தக் கால்நடைகள்தான். தற்போது கோமாரி நோயால் அதனையும் இழந்து மக்கள் சிரமப்பட்டு வருகிறார்கள். எனவே தமிழக அரசாங்கம் உடனடியாக இப்பிரச்சினையில் கவனம் செலுத்தி கால்நடைகளை இழந்து மக்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்குவதுடன், புதிதாக அவர்கள் கால்நடைகளைப் பெறுவதற்கு கடன்பெற வங்கிகள் மூலம் உரிய உதவிகள் செய்ய வழிவகை செய்ய வேண்டுமென்றும் வலியுறுத்தினார். நூற்றுக்கணக்கில் கிராமப்புற இளைஞர்களும் பெண்களும் விவசாயிகளும் இப்பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**நிர்பயா மீதான பாலியல் தாக்குதல் மற்றும் கொலையின் ஓராண்டு நிறைவு**

## அதிகரித்துவரும் பெண்கள் மீதான தாக்குதல்களை தடுத்து நிறுத்தக் கோரி

**டிசம்பர் 29, 2013**

## தேசிய மாநாடு

**மவ்லங்கர் அரங்கம், புதுதில்லி**

**டிசம்பர் 30, 2013**

## பாராளுமன்றம் நோக்கி பேரணி

**AIMSS AIDYO AIDSO**

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு - வெளியிடுபவர்: வி.பி.நந்தகுமார். அலுவலகம் : பு.எண். 16 (ப.எண். 18), இராட்லர் தெரு சூளை, சென்னை 600 112, அச்சகம் : அய்யனார் ஆப்செட், நெ.10, சுப்பராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094. ஆசிரியர் : வி.பி.நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.suci-c.in